குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | பிரமோதூத ஆண்டு ஆடித்திங்கள் 10-8-90 [இதழ் 9

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

மயிலாடுதுறை, குமரக்கட்டளை



குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி மூலவர்

ஸ்ரீ வள்ளி தேவசேனை உடனுறைய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோ[illegible]

அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 2-9-90 ஞாயிறு

ஞானசம்பந்த குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமைபாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10–7–90 | இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	குமரக்கட்டளை ஜீரணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகபத்திரிகை	409
2	தருமை ஸ்ரீல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 414
3	அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன கருத்தரங்கு	... 421
4	கம்பரின் சில ஐய விளக்கங்கள் !	... 425
5	தாலாட்டில் முகிழ்க்கும் பக்திச்சுவை	... 430
6	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	... 435
7	கடிதம்	... 438
8	தாயின் அழைப்பு	... 439
9	கோச்செங்கட்சோழர்	445
10	செய்திகள்	... 450
11	பார்வையாளர் குறிப்பு	452
12	எதிர்காலம்	... 453

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஓரின்ப மில்லா
  துருமலங்கள் போக்கியிடும்
பேரின்ப நின்குணமென்
  பேதாய்கேள் — பேரின்பம்
நின்குணம்போல் தோன்றுமது
  நீயாகை யான்இரும்பு
தன்குணமோ தீயியல்பு தான்.

— முத்திநிச்சயம் 13

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 9

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - ஆடி - 10—8—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்நயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான
கௌரீமாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயில்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
குமரக்கட்டளை ஸ்ரீ வள்ளிதேவசேனை உடனுகிய
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

ஜீரணோத்தாரண அஷ்டபந்தன

மகாகும்பாபிஷேகப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

கரவின்றி நன் மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலாடு துறையே.

— திருஞானசம்பந்தர்.

கொள்ளும் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ளம் உள்கி உரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறைஉறை
வெள்ளம் தாங்கு சடையனை வேண்டியே.

— திருநாவுக்கரசர்.

நிலைமை சொல்லுநெஞ் சேதவம் என்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாபநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே.

— திருநாவுக்கரசர்.

திருச்சிற்றம்பலம்

மண்ணியங் கரையின் தென்பால் வகுத்தசேய் நல்லூர் நீங்கி
எண்ணிய உதவும் பொன்னி யிகந்திடை மருதிளுேடு
தண்ணியல் மஞ்ஞை ஆடும் தண்டுறை பறியலூரும்
கண்ணுதல் இறைவன் தானம் ஏனவும் கண்டுபோனுன்.

— கந்தபுராணம்.

தில்லைவனம் காசி திருவாரூர் **மாயூரம்**
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

சிவபெருமான், ஒன்ருய், வேருய், உடனுய் நின்று உலகிற்கு நலம்செய்து அருளுகின்ருர். ஒன்ருய் நிற்றல் என்பது, உடலில் உயிர் கலந்திருத்தல்போல அவர், உலகப் பொருள்களில் நிறைந்திருத்தலைக் குறிக்கும். அப்பொருளில்தான் இறைவன் என்று பேசப்படுகிருர், வேருய் நிற்றல் என்பது, கடந்து நிற்கின்ற சூரியன் நம் கண்ணுக்கு ஒளியூட்டுவது போல், எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற முதல்வன் கடந்து நின்றே நமக்கு உபகரிக்கிருர் என்பதைக் குறிக்கும். இப்பொருளில் தான் கடவுள் என்று போற்றப்படுகிருர். உடனுய் நிற்றல் என்பது கண் காண்பதற்கு உயிர் உடனுய் இருந்து உதவி செய்வது போல், உயிர், ஒன்றைக் காண்பதற்கும் அவர் உடனிருந்து இயக்குகின்ருர்

என்பதை உணர்த்தும், இப்பொருளில்தான் இயவுள் என்று ஏத்தப்படுகிறூர். இவ்வாறு, மூவகையாலும் முறைசெய்து காக்கும் முதல்வன், உயிர்களைஈடேற்றும் பொருட்டு, பலதலங்களிலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் வழங்குகின்றுன், அத்தகைய சிவாலயங்களில் சிறப்புமிக்க ஒன்றுய், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருப் பதிகங்களை உடையதாய், சோழவளநாட்டில். காவிரி யின் தென்கரையில் முப்பத்தொன்பதாவது தலமாகப் போற்றப் படுவது திருமயிலாடுதுறை.

மயிலாடுதுறையில் விளங்கும் இறைவர் அடியவர் வேண்டும் வரம் அருள்பவராக அதாவது வள்ளலாக எழுந்தருளியுள்ளார் என்பதை ஞானசம்பந்தர், அப்பர் தேவாரங்களால் நாம் அறியலாம். அம்பிகை மயிலுரு வாய் இறைவனைப் பூசித்து அருள் பெற்றுத் தன்னை வழிபடும் அடியவர்கட்கு 'அஞ்சேல்' என்று அபயம் கொடுக்கும் அபயாம்பிகையாக விளங்குகிறூர். அஞ் ஞானம் அகற்றி மெய்ஞ்ஞானம் புகட்டும் ஞானபண்டி தனுக வீற்றிருக்கின்றூர் முருகப்பெருமான். துலா மாதத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளில் மூழ்கிப் பெறும்பயனை இத்தலத்தில் காவிரித்துலாக்கட்டத்தில் மூழ்கியோர் பெறுவர் என்பதோடு, கங்கை முதலிய தீர்த்தங்கள் ஐப்பசி அமாவாசை, கடை முழுக்கில் இத்துலாக்கட்டத்தில் மூழ்கிப் பாவம் போக்கிக்கொள் கின்றன என்பதைத் தலபுராணத்தால் அறியலாம். தருமை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் முத்தித் தலங்களில் ஒன்றுக இதனைக் குறிப்பிடுகின்றூர். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுலும் சிறப்புடைய இத் திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சி யிலும், இதில்உள்ள சுப்பிரமணியசுவாமிதிருக்கோயில் தருமை ஆதீன அருளாட்சியிலும் விளங்கிவருகின்றன.

இத்தலத்தில் சுவாமி கோயிலின் மேல்பால் விளங்கும் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய்க் கலியுக வரதராய்க் காட்சி தருகிறூர்.

முருகன் சிவபிரானின்வேறல்லர் என்பதைக்கச்சியப்பர் கந்தபுராணத்தில் சிவபிரானே சொல்வதாக 'நமது சத்தி அறுமுகன்' அவனும் நாமும் பேதகம் அன்றால், எனக்கூறுகின்றார். கயிலையங்கிரியிலிருந்து சூரசம்காரத்தின் பொருட்டுத்திருச்செந்தூர் எழுந்தருளும் வழியில் முருகப்பெருமான் திருச்சேய்ஞலூர் வந்து தங்கி மயிலாடுதுறை, பறியலூர்வழியாகச் செந்தில்சென்றார் எனக் கந்தபுராணம் கூறுகிறது. அருணகிரிநாதர் திருப்புகழிலும், ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழிலும் இம்முருகப்பெருமானைப் போற்றிப்பாடியுள்ளனர் ஒவ்வொருமாதக் கிருத்திகையிலும், ஐப்பசிமாதக் கந்தசஷ்டியிலும் இம்முருகப் பெருமானுக்குச்சிறப்புவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஐப்பசித் துலா மகோற்சவத்தில் பஞ்சமூர்த்திகளுள் ஒருவராகக்கொண்டாடப் பெறுகின்றார்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்வண்ணம் மயிலாடுதுறை குமரக் கட்டளையின் பராமரிப்பில் உள்ள விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியசுவாமி, அகத்தீசுரர், மீனாட்சி சுந்தரேசுரர் ஆலய விமானங்களும், அம்பாள் கோயிலில் விளங்கும் முருகப்பெருமான் விமானமும், குமரக்கட்டளை உற்சவ மண்டபமும், மயிலாடுதுறை பக்தர்களின் நன்கொடைப் பணியாக ஜீரணோத்தாரணம் செய்யப்பெற்றும், இதர திருப்பணிகள் குமரக்கட்டளையின்சார்பில்செய்யப்பெற்றும், ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், இக்கட்டளையைச் சேர்ந்த விமானங்கட்கும், மூர்த்திகட்கும், அறுபத்துமூன்று நாயன்மார்கட்கும், ஸ்ரீஅபயாம்பிகை உடனாகிய ஸ்ரீமாயூரநாதசுவாமிக்குக் கும்பாபிஷேகம் நடைபெறும் அதேநேரத்தில், நிகழும்

பிரமோதூத௵ ஆவணி௴ 17௳ (2—9—90)ஞாயிற்றுக் கிழமை உத்திராட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் உதயாதி 2-31 நாழிகைக்குமேல் 7-31 நாழிகைக்குள் (காலை 7-05 மணிக்குமேல் 9-06 மணிக்குள்) கன்யா லக்னத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வேதசிவாகம முறைப்படி சிறப்பாக நடைபெற இருக்கிறது. அன்றுமாலை மகாபிஷேகமும், திருக்கல்யாணமும், இரவு மின்விளக்கு அலங்காரத் துடன் கூடிய வெள்ளி ரதத்தில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவீதியுலாக்காட்சி யும் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வந்து தரிசித்து இகபர சௌபாக்யங்கள் அனைத்தும் பெற்று இன்புறுவார் களாக.

விழா நாட்களில், ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் வேத பாரா யணமும், தேவாரப் பாடசாலை ஆசிரியர், மாணவர் களாலும், ஓதுவாமூர்த்திகளாலும் திருமுறைப்பாரா யணமும், குமரவிலாசமண்டபத்தில் சமயக்கருத்தரங்கு களும் நடைபெறும்.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்
டிரஸ்டி ஸ்தானிகம்

வித்துவான். சுவாமிநாதத் தம்பிரான்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாரூரில் நடைபெற்ற திருமுறை வேள்வியில் ஏழாம் திருமுறை முற்றோதல் நிறைவில் வழங்கியருளிய

ஆசியுரை

20—7 –1990

" ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக் கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாள் என்றும்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வம் ஆமால் "

— சிவஞான முனிவர்.

மூலாதாரத் தலம் :

இன்று இத்திருவாரூரில் ஏழாம் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி சிறப்புறநிகழ்ந்துள்ளது. இத்தலம்உலகமனைத்தையும் வடிவமாகக் கொண்ட விராட்புருஷனுக்கு மூலாதாரத் தலமாக விளங்குவது. இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் அருள்மிகு திருமூலட்டானேஸ்வரர் எனப்போற்றப் பெறுவதனாலும் இவ்வுண்மை தெரியலாம். இதனால்தான் அப்பரடிகளும் "சென்னி மிசை வெண்பிறையாய் போற்றி! போற்றி! திருமூலட்டானனே போற்றி போற்றி" என்று போற்றினர். அருணகிரிநாதரும்,

" ஆதாரத்து ஒளியோனே, ஆரூரில் பெருமாளே "

என்று மூலாதாரத்தில் ஒளிப்பொருளாயுள்ளவன் ஆரூர்ப் பெருமான் என்பதைக் குறிப்பிட்டருளினர். இத்தலம் மூலாதார க்ஷேத்திரம் ஆதலின் இப்பதியின் தொடர்புடைய நம்பியாரூரர்

யோகநெறியினை விளக்க வந்தவராயினர். அப்பரடிகளும், இத்தலத்துப் பெருமானைப் பாடியபோது, "அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட அயிர் ஆம் (நுண்மணல் வடிவு) வண்ணமாய எம்பெருமான், உயிரா வண்ணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிழியில் உரு எழுதி உயிர் ஆவணம் செய்திட்டு அர்ப்பணிக்கும் பொழுது அருள் வழங்குவான் என்று குறிப்பிடுதலால் இத்தலம் யோக நெறிகை கூடும் சிறப்புடைமையை விளக்கியருளுகிறார். "திருவளர் ஆரூர் மூலம்" என்பதனால் திருவிளையாடற் புராணமும் இதனையே குறிக்கின்றது. இவ்வகையில் பாரம்பரிய நிலையிலும் அருளாளர்கள் வாக்கிலும் இத்தலம் மூலாதாரத்தலமாக விளங்குகிறது என்பதை உணரலாம்.

மூன்று காரணங்கள் :

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும்புறச்சமயங்களின் தாக்குதலினின்றும் தமிழகத்தை மீட்டுச் சைவ சமயத்தை நிலைநிறுத்தினர். இவர்களுக்குப் பின் ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு சுந்தரர் தோன்றினார். இவர் சைவசமயத்தை மேலும் வளர்த்ததோடு, பாரம்பர்ய சமயப்பண்பு நெறிகளை – அடியார் களைப் போற்றும் பண்புநெறிகாட்டியருளவும், சைவ சமய அடியார்கள் வரலாற்றைப் பதிவு செய்யும் திருத்தொண்டத் தொகையினை வழங்கவுமே அவதாரம் செய்தார். எனவே இவரைச் சைவர்களின் குலதெய்வம் எனப்போற்றுகிறார். இவர் பெண்களின் மையலில் மயங்கி, அக்குற்றத்தைப் போக்கிக் கொள்ளவே இந்த மண்ணுக்கு வந்தருளினார் என்று மட்டும் கருதாமல், அதுவும் ஒரு காரணமாக, சைவசமய மக்கள் அருளாளர்களின் நெறியில் நின்று உய்தி பெறவேண்டி வழி காட்ட ஒருவரை அவதரிக்கச்செய்த பெருமானின் கருணை ஒரு காரணமாக, தென்திசை வாழ்மக்கள் செய்த தவம் ஒரு காரண மாகச் சுந்தரர் தோன்றினார் என்றுகொள்வதே மரபும் முறையும் ஆகும். இதனால்தான் சேக்கிழார் சுவாமிகள்,

"மாதவம் செய் தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத்தொகை தரப்
போதுவார் அவர்மேல் மனம் போக்கினார்"

என்று கூறுகிறார்.

வித்தின்றி விளைவு செய்யும் ஆற்றல் :

இறைவன் பேராற்றலும், பேரருளும் உடையவன். இதனை விளக்கவந்த அருளாளர்கள், அவன், தன் நினைவு மாத்திரை யினாலேயே அனைத்து உலகங்களையும் படைக்கவும், காக்கவும்

அழிக்கவும் வல்லவன். அங்ஙனம் செய்யும் போதும் ஓர் ஆதாரம் இன்றியேகூட எதனையும் தோற்றுவிக்கும் ஆற்றல் உடையவன் என்று கூறுவர். இதனை மணிவாசகர்,

" விச்ச தின்றியே விளைவு செய்குவாய் "

என்று விளக்குகிருர். விதைகூட இல்லாமல் விளைவினை ஏற்படுத்தும் ஆற்றல் இறைவன் ஒருவனுக்குத்தான் உண்டு. இக்கருத்தினைக்குமரகுருபர சுவாமிகளும் மீனட்சியம்மைப் பிள்ளைத்தமிழில்,

" வித்தின்றி விளைக்கும் பரமானந்தத்தின் விளைவேவருக "

என்று மீனட்சி அம்மையை விளிக்கிருர். இங்ஙனம் வித்தின்றி விளைவு செய்யும் ஆற்றல் பெருமானுக்கு உண்டு என்பது, ஆலாலசுந்தரின் அருள் வரலாற்றில் விளங்குகிறது. திருப்பாற் கடலைக் கடைந்தபோது தோன்றிய விஷத்தை எடுத்துவரச் செய்தற்குச் சிவபெருமான் ஓர் உருவத்தைப் படைத்தருளினர். கண்ணுடியின் முன்பு தான்நின்று, அதனுள் தோன்றிய பிம்பத்தைத் தம்சுட்டு விரலால் வருக என அழைத்தார். அவ் வுருவத்தில் கயிலைமலையில் சஞ்சரித்துவந்த தகுதி வாய்ந்த ஓர் உயிர் இறையருளால் பதிவாகி அழகிய உருவத்தோடு வெளிவந்தது. அதுவே 'சுந்தரன்' எனப்பெயர் பெற்றது. அணுக்கத் தொண்டராக விளங்கியது. ஆலகால விஷத்தைத் தம் கைகளால் ஏந்தி வந்து இறைவனிடம் சேர்த்மையால் 'ஆலாலசுந்தரர்' எனப் பெயர் கொண்டது. இவ்வுயிர், அநிந்திதை, கமலினி என்னும் பெண்களின் மையலில் ஒரு விநாடி ஈடுபட்டதால் மண்ணுலகம் செய்த தவம் காரணமாக நம்பியாரூரராய் இங்குத் தோன்றியது. எனவே, சராசரி உயிர், உடல்பெறுதற்காம் உலகியல் அமைப்பின்றியே இறைவன், அவன் நினைந்தால் தகுதிவாய்ந்த ஓர் உயிருக்கு எந்தக் கருவி கரணமும் இன்றி உடலை அமைத்துக் கொடுக்க முடியும் என்பது இவ்வரலாற்ருல் அறியமுடிகிறது.

ஆரூரன் – ஊரன் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம்மைப் பல பெயர்களால் குறித்துக் கொள்கிருர். வன்தொண்டன், ஆரூரன், ஊரன், வனப்பகை அப்பன், நாவலர்கோன், சடையன் சிறுவன், தொண்டன், நான்மறை அங்கம் ஓதிய நாவன் என்பன அப் பெயர்கள். இவற்றில் ஆரூரன் என்பது திருவாரூரின் தொடர்

புடையது. இவர் தாயார் பிறந்த ஊர் ஆரூர் ஆதலின் தாய் வழிப்பாட்டனுர் பெயராகிய ஆரூரன் என்பதை இவருக்குச் சூட்டினர் எனத் தெரிய வருகிறது. ஊரன் என்பது திருவாரூரன் என்னும் பொருளிலும், திருநாவலூரன் என்னும் பொருளிலும் இடம் பெற்றுள்ளது.

பதிகங்களின் அமைப்பு :

இதுவரை சுந்தரரின் அருள் வரலாற்றுச் செய்திகள் குறித்துச் சிந்தித்தோம். இனி, அவர் அருளிய பதிகங்கள் குறித்துச் சிந்திக்க முற்படுவோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய பதிகங்களுள் கிடைப்பன நூறு. இவற்றில் தலங்களை மையமாகக் கொண்டது 96. அன்றிப் பொதுப்பதிகங்களாக நான்கு உள்ளன. 1. திருநாட்டுத் தொகை, 2. நமக்கடிகளாகிய அடிகள், 3. முடிப்பது கங்கை, 4. ஊர்த்தொகை என்பன. 'திருநாட்டுத்தொகை' என்னும் பதிகம் சிறுசிறு நாடுகளின் பிரிவுகளை வைத்துப் பாடப் பெற்றது. 'ஊர்த்தொகை' என்பது சிறுசிறு ஊர்களின் பெயர்களைக் குறித்துப் பாடப்பெற்றது. 'நமக்கடிகளாகிய அடிகள்' என்பது ஒவ்வொரு பாடலின் இறுதிவரி, ' நமக்கடிகளாகிய அடிகளே ' என்று முடியும் வண்ணம் அமைந்தது; ஆதலால் இப்பெயர் பெற்றது. 'முடிப்பது கங்கை' என்பது. பதிகத்தின் முதல்பாடலின் முதல்வரி, 'முடிப்பது கங்கை' எனத் தொடங்குவது; ஆதலின் இப்பெயர் பெற்றது.

இவர் அருளிய பண்கள் பதினேழு. இந்தளம், தக்கராகம், நட்டராகம், கொல்லி, கொல்லிகௌவானம், பழம்பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தாரபஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கௌசிகம், செந்துருத்தி, பஞ்சமம் என்பன. இப்பதினேழு பண்களில் திருஞானசம்பந்தராலும் பாடப்பெற்றவை பதினறு. செந்துருத்திப் பண் மட்டும் இவர் பாடிய புதிய பண் ஆகும். இவர் பாடியருளிய எஞ்சிய பண்களிலும் ஒரு சில பண்கள் கட்டளைப் பேதங்கள் கொண்டனவாக விளங்குகின்றன.

பித்தா - அருளாளா :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனல் தடுத்தாட்கொண்ட பிறகு பாடிய முதல் பதிகம், " பித்தா பிறைசூடி " என்று தொடங்குவதாகும்.

"பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்? மனத்துன்னை
வைத்தாய், பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா! உனக் காளாய், இனி அல்லேன் எனல் ஆமே"?

என்பது முதல் பாடல். இப்பாடல் இந்தளப்பண்ணில் அமைந்தது இதில் இறைவனை, "பித்தா" என்று விளித்துள்ளார். இச்சொல், வழக்குத் தொடர்ந்தபோதே இறைவன் அருளால் சுந்தரர் வாக்கில் வந்ததுதான். என்ன சொல்லிப் பாடுவேன் என்ற சுந்தரர்க்கு இறைவன் நம்மை முன்னர்ப் பித்தன் என்றமையால் பித்தன் என்றேபாடுக என்றார். பித்தன் என்ற சொல் பெருங்கருணையாளன் என்பதைக் குறிக்கும். "பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்ற பழமொழியாலும் இதனைத் தெளியலாம். திருக்கயிலாயத்தில் ஆலால சுந்தரராய் மாதர்மீது மையல்கொண்டபோது, கயிலாயநாதன் மையல் கொள்வதற்கு ஏற்ற இடம் பூவுலகே, அங்குச் சென்று மையல் தீர்க என்றருளினர். அப்போது சுந்தரர் "மையல் மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டருள்" என வேண்டினர். கயிலையில் விடுத்த அவ்வேண்டுகோளை அணு அளவு கூடப் பிறழாமல் மயங்கும் சமயத்தில் ஓலை கிழித்தல் முதலிய அவமானங்களையும் பொருட்படுத்தாமல் தடுத்தாட் கொண்டான் என்றால் இச்செயல் பெருங்கருணையிருந்தாலன்றி நிகழாதல்லவா? எனவேதான் சுந்தரர் தன்னை அறியாமலேயே இறையருளால்பொருள்மாறுபடாமல்பித்தன்என்றார். அதனையே முதலாக வைத்துப் பாடுக என்றார் பெருமானும். பித்தா என்று முதலில் சொன்னாலும் அவ்வரியிலேயே இறுதியில் அருளாளா என்றும் குறிப்பிட்டுவிட்டார். அடுத்த வரியில் இதுகாறும் வழக்கிட்டு விட்டு இப்போது மறவாதே நினைக் கின்றேன் என்று சொல்கிறேனே, அதற்கு என்ன காரணம் தெரியுமா? என் மனத்து உன்னை வைத்தமையால் நினைக்கின் றேனே தவிர அடியேனாக நினைக்கவில்லை என்று விடையும் சொல்கிறார். இதனைத்தான் எத்தால் மறவாதே நினைக்கின்றேன் என்று கேள்வி கேட்டு அதற்குப் பதிலாக மனத்துன்னை வைத்தாய், அதனால்-என விடைதருகிறார். பெண்ணையாற்றின் தென்கரையில் வெண்ணெய்நல்லூரும், அதில் அருட்டுறை என்னும் ஆலயமும் உள்ளன என்பதை அடுத்துச் சொல்லி அவ்வருட்டுறையுள் உள்ள அத்தா என அழைத்துப் பாடலை நிறைவு செய்கிறார். இப்படிப் பொருள் உணர்வோடு திருமுறை களைப் படிக்கவும், பாடவும், சிந்திக்கவும் முற்படுவோமானால்

நம்வாழ்வு எல்லா வகையிலும் மேம்பட்டுத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நினைந்து நினைக்கச் செய்பவன் :

உயிரானது, இறைவனை என்ஞான்றும் மறவாமல் நினைக்கவேண்டுமெனில், அவ்விறைவன் இவ்வுயிரின்மாட்டுச் சிறப்பு வகையால் எழுந்தருள வேண்டும் என்பது புலனாகிறது. இதனைச் சுந்தரர் திருவாழ்கொளிப்புத்தூர்ப் பதிகத்தில், "தலைக்கலன் தலைமேல் தரித்தானைத் தன்னை என்னை நினைக்கத் தருவானை" என்று கூறுவதால் தெளியலாம். இக்கருத்தினை அப்பரடிகளும்,

"என்னை யேது ம்அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடி யான்என் றறிதலும்
தன்னை நானும் பிரான்என் றறிந் தேனே"

என்று கூறுகிறார்.

சுந்தரர், திருநீடூர்ப் பதிகத்தில் இறைவன் எவ்வுயிரிடத்துத் தன்னைக் கொடுப்பான் அதாவது எழுந்தருள்வான் என்பதனை விளக்குகிறார். ஒரு குற்றமும் இல்லாத தூயசிந்தை கொண்ட உயிரிடத்துத் தன்னையே கொடுப்பான் என்கிறார்.

"குற்றம் ஒன்றடியார் இலர் ஆனல்
கூடுமாறு தனைக் கொடுப்பானைக்
கற்ற கல்வியினும் இனியானைக்
காணப்பேணும வர்க்கெளியானை
முற்ற அஞ்சுந் துறந்திருப்பானை
மூவரின் முதலாயவன் தன்னைச்
சுற்று நீர்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்றலைப் பணியாவிட லாமே"

என்பது அப்பாடல். இதில் கூடுமாறு தனைக் கொடுப்பானை என்று இல்லாமல் கூடுமாறதனைக் கொடுப்பானை என்று பாட பேதம் உள்ளது. அதைத் திருத்திக் கொள்ளவேண்டும். இதில்இறைவன் கற்றகல்வியினும் இனியனாய் விளங்குகின்றான் என்றும், அவனைப் பேணுமவருக்கு எளியவனாய் இருக்கின்றான் என்றும், ஐந்து பொறிகளையும் முற்றத் துறந்திருக்கிறான் என்றும், மூவரின் முதலாய் விளங்குகிறான் என்றும் கூறுகிறார். 'முற்ற அஞ்சும் துறந்திருப்பான்' என்பது, "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் குறட்பாவை நினைவு கூர்வதாய் உள்ளது. கல்வியினும் இனியன் என்னுமிடத்து அதைவிட இனியான் என்ற உறழ்ச்சிப் பொருளுடன், கற்ற கல்வியின்

கண்ணும் இனிப்பவன் அவனே என ஏழாம் வேற்றுமை பொருள் சிறப்பதையும் கண்டு இன்புறுவோமாக. "குற்றம் ஒன்று அடியார் இலராகில் கூடுமாறுதனைக் கொடுப்பானை" என்று சுந்தரரும், "துறந்தோர் உள்ளப்பெரும் பயனை" என்று அப்பரும் பாடியுள்ளமையைப் பார்த்தால் சாதாரண மக்கள் உள்ளத்தில் இறைவன் வாரான்போலும் என்று நினைத்துவிடக் கூடாது. சுந்தரரையே சிறிது வழக்கிட்டுப் பக்குவப்படுத்தித் தானே அவருள்ளம் புகுந்தார். எனவே இறைவன் காலாந்தரத்தில் நம்மையும் பக்குவப்படுத்தி நமதுள்ளத்திலும் வீற்றிருப்பார். இக்கருத்தையே நம்பியாண்டார் நம்பிகள். திருநாறையூர் பொல்லாப்பிள்ளையார் மீது பாடியுள்ள ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். முதலில் இறைவன் நம்மை ஒரு பொருளாக நினைக்கின்றான். அடுத்து நம்மை அடிமையாக ஏற்றுக் கொள்கிறான். பிறகு நமக்கு வரும் ஆணவாதி இடர்களை யெல்லாம் அகற்றுகிறான். இதன்பிறகே தன்னையே நம்மிடத்துத் தருகிறான். தகுதி தரம் இல்லாதாரிடத்து அவன் வருவானாகில் அவனை அறிந்து அவனால் நலம்பெறும் பேறுநமக்கு இல்லையாய் விடும். அதனால்தான் தகுதிவரும்வரை மறைந்திருந்தே அருள் செய்கிறான். குழந்தை கையில் பொற்கிண்ணம் கிடைத்தால் அப்பொற்கிண்ணத்தின் அருமையும், அதனைப்பயன்கொள்ளும் முறையும் அறியாது. அதனால் பெற்றோர் பொற்கிண்ணத்தைக் குழந்தை கையில் தகுதி வரும்வரை கொடுக்கமாட்டார்கள் அல்லவா? இதைத்தான் மணிவாசகரும், "மழக்கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருது கின்றிலேன்" என்றருளினர். எனவே எல்லோருள்ளத்திலும் இறைவன் வருவான் நாம்நம் தகுதியை வளர்க்கமுற்படுவோம்.

இவர் பாடியருளிய திருத்தொண்டத்தொகை தான் இவர் வரலாற்றிலேயே முதன்மை வாய்ந்தது. இது அடியார்கள் வரலாறு அறிதற்கு மூலமாய் இலங்குவது என்பார் சேக்கிழார். வெள்ளானைச் சருக்கத்தில், "மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி" என்று போற்றுகிறார்.

இத்தகைய பலசிறந்த கருத்துக்களை உடைய தேவாரப் பாசுரங்களைத் தொடர்ந்து ஓதுதலும், ஓதியதை உணர்ந்து அவ்வண்ணம்வாழ்தலும் சைவஅன்பர்களின் கடமைகளாகும்.

வாழ்த்து :

இன்று, இத்திருமுறை முற்றோதலில் கலந்துகொண்ட அன்பர்களும், தொண்டர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுஇனிதுவாழவும், திருமுறை வளர்ச்சிப் பணியில் மக்கள் வளர்ச்சியும் உள்ளதை உணர்ந்து அனைவரும்கலந்துகொண்டு சிறப்புப் பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

குருபாதம்

வளநிலவு குலவமரர் அதிபதியாய் நீல
மயிலேறி வருமீச னருள்ஞான மதலை
அளவில்பல கலையங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அண்ணல்விறலெண்ண
உளமருவு சூரனுரம் எமதிடும்பை யோங்கல்
ஒன்றிரண்டு கூறுபட வொளிதிகழ்வேல் உகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம்.

— உமாபதி சிவாசாரியர்.

அன்புடையீர் !

தருமை ஆதீனம் மயிலாடுதுறை குமரக்கட்டளை

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

திருக்குடமுழுக்குப் பெருவிழாவை

முன்னிட்டுத்

தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின் வண்ணம் நிகழும் பிரமோதூத ஆண்டு ஆவணித்திங்கள் 15-ம் நாள் முதல் 17-ம் நாள் முடிய 31—8—90 முதல் 2—9—90 முடிய) அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலில் குமரக்கட்டளை ஸ்ரீ குமரவிலாஸ் மண்டபத்தில் முற்பகல் 10-00 மணிமுதல் 1-00 மணி வரையிலும், பிற்பகல் 2-30 மணி முதல் 5-00 மணி வரையிலும் கருத்தரங்கும் மாலை 6-00 மணி முதல் சொற்பொழிவும் நிகழும்.

சமய தத்துவ அறிஞர்கள் பலர் பங்கேற்று உரை நிகழ்த்த உள்ளனர். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பெரிதும் விரும்பி அழைக்கிறோம்.

தருமபுரம், 27—8—90.

தி. ந. இராமச்சந்திரன்,
கௌரவ இயக்குநர்.

தருமை ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,

தருமபுரம், மயிலாடுதுறை.

31—8—90 வெள்ளிக்கிழமை] [காலை 10-00 மணி

முதல் அமர்வு :

கருத்தரங்கு

இறைவணக்கம் :

திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்தி
தலைமை ஆசிரியர்,
தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை, தருமபுரம்.

வரவேற்புரை :

சைவ சித்தாந்தக் கலாநிதி
திரு. தி. ந. இராமச்சந்திரன்,
கௌரவ இயக்குநர், சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம்.

ஆய்வுப்பொருள் :

" அருள்நூல்களில் அறுமுகச் செவ்வேள் "

இணைப்பாளர் :

பேராசிரியர். திரு. அ. மு. பரமசிவானந்தம்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

கட்டுரையாளர்கள் :

நியாய – மீமாம்ஸா சிரோமணி
திருவெண்காடு **திரு. டி. கே. முத்துசாமி சாஸ்திரிகள்,**
கரூர்.

— வேதங்களில்

சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார்,
தலைமை ஆசிரியர்,
தருமை ஆதீனம் வேதசிவாகமப் பாடசாலை, தருமபுரம்

— ஆகமங்களில்

இரண்டாம் அமர்வு பிற்பகல் 2–30 மணி

இணைப்பாளர் :

திரு. தி. ந. இராமச்சந்திரன்,
சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

கட்டுரையாளர்கள் :

திரு. ஆர். சுப்பிரமணியம்
இந்தியப் பண்பாட்டு ஆய்வுக் கழகம், பாண்டிச்சேரி.
— புராண இதிகாசங்களில்

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி,
பேராசிரியர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.
— சங்க இலக்கியங்களில்

சொற்பொழிவு மாலை 6–00

தொடக்கவுரை :

டாக்டர் திரு. மு. சுவாமிநாதன்,
மயிலாடுதுறை.

சொற்பொழிவாளர்கள் :

திரு. இரா. செல்வநாயகம்,
நூலகர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்,
— செல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பா

டாக்டர் திரு. தெ. ஞானசுந்தரம்,
பேராசிரியர், & தமிழ்த்துறைத்தலைவர், கந்தசாமிநாயுடு ஆடவர் கல்லூரி, சென்னை.
— முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ்

1—9 90 சனிக்கிழமை] [காலை 10-00 மணி

மூன்றும் அமர்வு :

இணைப்பாளர் :

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்,
முதல்வர், (ஓய்வு) தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன்,
பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மன்னம்பந்தல்.
— தேவாரத் திருமுறைகளில்

திரு. தி. ந. இராமச்சந்திரன்,
கௌரவ இயக்குநர், சைவசித்தாந்த ஆராய்ச்சிநிறுவனம், தருமபுரம்.
— எட்டு முதல் பன்னிரண்டு திருமுறைகளில்

நான்காம் அமர்வு : பிற்பகல் 2-30 மணி

இணைப்பாளர் :

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன்,
மயிலாடுதுறை.

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, தருமபுரம்.
— மெய்கண்ட நூல்களில்

டாக்டர் திருமதி. ப. நீலா,
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.
திருப்புகழில்

சொற்பொழிவு மாலை 6-00 மணி

தொடக்கவுரை :

திரு. இரா. சிவபுண்ணியம், மயிலாடுதுறை.

சொற்பொழிவாளர்கள் :

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், தருமபுரம்.
— கதிர்காமவேலவர் திருவருட்பா

திரு. தெ. இராஜாமணி,
ஆசிரியர்,
ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.
— கந்தர் கலிவெண்பா

2 – 9 – 90 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 6-00 மணி

சொற்பொழிவு

தொடக்கவுரை :

திரு. இரா. இராமலிங்கம், மயிலாடுதுறை.

சொற்பொழிவாளர்கள் :

டாக்டர் திருமதி. ப. நீலா, தருமபுரம்.
கந்தபுராணச் சுருக்கம்

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
பேராசிரியர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.
— கந்தர் அனுபூதி

திரு. இரா. மருதநாயகம்,
பேராசிரியர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.
— கந்தரலங்காரம்

நன்றியுரை :

திரு. எஸ். பாஸ்கரன்,
பதிவாளர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம்.

வாழ்த்து :

கம்பரில் சில ஐய வினாக்கள்!

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
தருமபுரம்.

பல்வேறு தயக்கங்கள் :

தமிழ் இலக்கியங்களில், இதுநாள்வரை நம்மவர்கள் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள் நிறைவுதரத்தக்கன அல்ல. ஏறத்தாழ ஒரு நூறு ஆண்டுகள் நிறைந்தும் நமது முயற்சிகளில் முதிர்ச்சியின் சாயல்கள் நிறைவாக இல்லை. காரணங்கள் பல. முயற்சி மேற்கொண்டவர்களில் பலர் பல்துறை அறிஞர்களாகத் திகழவில்லை. கல்வியாளர்களாகத் திகழ்ந்தவர் பலர்; சிந்தனையாளர்கள் மிகச் சிலர். ஒரு ஆய்வின்மேல், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன; மூலநூலை நேரே அணுகி ஆயத் தலைப்பட்டார் பலராக இல்லை. சமூகம், சமயம், மரபு சார்ந்த தயக்கங்கள், கூர்த்த ஆய்வாளர்களைக் கூட, முனை மழுங்க வைத்தன. புதுமைகளை ஏற்க மறுத்த வரட்டுப் பழமைவாதிகளின் ஆதிக்கமும், புதிய ஆய்வுகளுக்குத் தடையாகவே இருந்து வந்துள்ளது.

மூன்று களங்கள் :

ஒரு பேரிலக்கியம்பற்றிய ஆய்வு மூன்று களங்களில் நிகழ்த்தப் பெற வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இலக்கியம் எழுவதற்குக் காரணமான அரசியல், சமூக, சமயப் பின்புலங்கள் முதற்கண் முற்றும் ஆராயப்படவேண்டும்.

இரண்டாவதாக, அவ்விலக்கியத்தின் புறக்கட்டமைப்பும், உள்ளீடும் துல்லியமாக மதிப்பிடப்படவேண்டும்.

குறித்த ஓர் இலக்கியம் பிற்காலத்தில், அதன் சார்புடைய துறைகளில் நேரடியாகவும், பிற துறைகளில் மறைமுகமாகவும் விளைத்த தாக்கங்கள் முழுவதாக ஆய்ந்து சுட்டப்பெறவேண்டும்.

நமது இலக்கிய ஆய்வுகள் பலவும் மேற்குறித்த இரண்டாம் களத்தில் மட்டுமே இதுநாள் வரை மேற்கொள்ளப்பெற்றுவந்துள்ளன. அதனால்தான், நமது இலக்கியவரலாறுகள், இலக்கிய அறிமுகங்களாகவே அமைந்துள்ளன.

கம்பரில் ஆய்வு முயற்சிகள் :

கம்பருக்கு அரைநூற்றாண்டுக் காலமாக ஆரவாரமான அணி விழாக்களைத் தமிழகம் எடுத்து மகிழ்ந்துள்ளது. பெரும்பாலும் அவ்விழாக்கள் தமிழர்களின் இலக்கியச்சுவை உணர்வுக்கு விருந்து படைக்கவேபயன்பட்டன. கம்பரில் மேற்கொள்ளப்பட்டதரமான ஆய்வு முயற்சிகளும்சரி, வெளியிடப்பெற்ற நூல்களும்சரி, விரல் விட்டு எண்ணத்தக்கனவே. கூர்த்த நல்லறிவுபெற்ற அறிஞர்களும் கூட மேலெழுந்த வாரியாகவே பேசினர், எழுதினர். எல்லாம் கூடிக்களித்தலும், பேசி மகிழ்தலுமாகக் கழிந்தன. தன்னேரிலாத கம்பர் காப்பியத்தை ஒட்டி ஆய்வு மேற்கொள்ள நூற்றுக்கணக்கான தடங்கள் இருந்தும், ஒரு சில தடங்களிலேயே அறிஞர்கள் முயன்றனர். அதற்கான உண்மைக் காரணங்களும்கூட ஆராயப் படவேண்டும்.

கதைக்கருத் தேர்வில் ஓர் ஐயம் :

கம்பரின் காப்பியத்தின் உட்புகாமல், புறத்தே நின்று சில வினாக்களை எழுப்புவேன். இவற்றில் விடை காணப்பட்டவை எவை ? காணப்படாதவை எவை ? ஏன் என்பதைக் கம்பருலகம் சிந்திக்கட்டும்.

தமிழ்க் காப்பிய வரலாற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிற்குப்பின். சேக்கிழார்காலம்வரை ஒன்பது நூற்றாண்டுகளில் கம்பர் உட்படப் பெருங்காப்பியம் படைத்தார் பலரும், தம் கதைக் கருவைத் தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளாமை ஏன் ?

ஒன்பது நூற்றாண்டுகளில் ஒரு வீரகாவியம் பாடுவதற்குரிய வரலாற்று நிகழ்வுகளோ, தனிமனித வீரங்களோ இந்தமண்ணில் நிகழவேயில்லையா? அப்படியே இருந்தாலும், ஒரு கற்பனைக்களம் அமைத்தல் இயலாத ஒன்று? சீவகனும், உதயணனும், இராமனும் தமிழ்மண்ணில் காப்பியத்தலைவர்களாக ஏற்றுப் போற்றப் பெற்றமைக்கான உண்மையான காரணங்கள் யாவை? நாடறிந்த கதைகளின்மேல் காவியம்பாடுதல் எளிமை என்ற நோக்கமா?

என்றால், சீவகன் கதையும்; உதயணன் கதையும், காப்பிய வரவுக்குமுன் தமிழ் மக்களுக்கு எந்த அளவுக்கு அறிமுகமாகியிருந்தன எனின் சான்றுகள் உண்டா? தமிழ்மண்ணில் வாழ்வு பெற்ற அப்புறச் சமயங்களின் ஆளுமையின் விளைவுகள்தாம் இத்தகு காப்பியங்களா? எனின், இவற்றைக் கலைக்காப்பிய வடிவங்களாக ஏற்பது எவ்வாறு?

கதைக்கரு பற்றிய சிந்தனைத் தடத்தில் மேலும் பல வினாக்கள் ஆய்வுப் போக்கில் எழும். அவற்றை அறிஞர்கள் போக்கிற்கு விட்டுவிடுகிறேன்.

இராமாவதாரம் எடுத்தது ஏன்?

கம்பருக்குத் தனித்து வருவோம்.

திருமால் சமயியாய், நாராயணமூர்த்திமேல் பக்தி கொண்டவராகவே கம்பரை நிறுத்திக்கொண்டு சில வினாக்களை முன்வைக்கலாம்.

கம்பருக்கு முன்னோடிகள் பலர். வைணவ ஆழ்வார்கள் குறிக்கத்தக்கவர்கள். திருமாலின் அவதாரங்களில் ஆழ்வார்கள் பெரிதும் போற்றியது கண்ணனையே என்பதைக் கற்றோர் அறிவர். கம்பருக்கு முன் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பாரதப் பெருங்காப்பியங்கள் ஏதும் தமிழில் இடம் பெற்றிருக்கவில்லை. பாரதம் பாடிய பெருந்தேவனார் பெயர் அறியப்பட்டதே அன்றி நூல் இல்லை; பாரத வெண்பா காப்பியமாகாது. என்றால், வடமொழியில், வியாசர் இருக்க, தமிழில் ஆழ்வார்கள் தடத்தில் கம்பர் பாரதப் பெருங்காப்பியத்தைப் பாடி இருக்கலாமே? ஆழ்வார்கள் பெரிதெடுத்துப் பாடாத இராமாவதாரத்தைத் தேர்ந்து கொண்டதற்கு என்ன காரணம்?

கம்பர் வாழ்ந்த நிகழ்காலச் சமூக அமைப்பில் கண்ணன் கதையைவிட, இராமன் கதையே தேவை என்ற எண்ணத்தின் உந்தலில் இராமகாதை பிறந்ததா? என்றால், காப்பியக் கதைத் தேர்வுக்கும், நிகழ்காலச் சமூக வாழ்வுக்கும் தொடர்பு காண இயலுமா?

சோழர் ஆதரவு கிடைக்காதது எதனால்?

கம்பர் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு என்று நிறுவும் பல அறிஞர்களின் ஆய்வுகளை ஏற்றுக்கொண்டால், அக்காலம் பிற்காலச்சோழர்கள் தன்னேரில்லாத ஆட்சிசெய்த காலம் என்பது

புலப்படும். தமிழ்க் காப்பியக் கவிஞர்கள் சிலருள் முதல் மூன்று இடங்களுள் ஓர் இடத்தில் வைத்துப் போற்றத்தக்கவர் கம்பர். தமிழ் இலக்கியம் பல்துறை வளர்ச்சிபெற்ற காலம் பிற்காலச் சோழர் ஆட்சிக் காலம் என்பதை இலக்கிய வரலாறுகள் ஏற்கின்றன. கவிச்சக்கரவர்த்தி கம்பர் சோழப் பேரரசர்களால் ஏற்றுப் போற்றப்பெறுமல, எங்கோ வாழ்ந்திருந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலால் ஆதரிக்கப்பெற்றது ஏன்? கம்பரைச் சோழ மன்னர்கள் அறிந்திருக்கவில்லையா? அல்லது கம்பர் சோழர் உறவை விரும்பவில்லையா? ஒட்டக்கூத்தருப, சயங்கொண்டாரும் பெற்ற சோழ மன்னர் ஆதரவு கம்பருக்குக் கிடைக்காமல் போனதற்கு என்ன காரணம்?

சோழர்குல வீரவரலாற்றைப் புனையாமைபற்றி வந்த கோபமா? சிவநெறிநின்ற சோழப் பேரரசர்களுக்கு இராமாவதாரம் பற்றிய கதைப்புனைவில் நாட்டமின்மையா? சோழ மாமன்னர்களின் வாழ்வியலில் காணப்பட்ட குறை ஏதும் கம்பரால் காப்பியத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ கண்டிக்கப்பட்டுள்ளதா? திருத்தொண்டர் புராணப் புனைவுக்கும், அரங்கேற்றத்திற்கும் துணைநின்ற சோழர் குலம், இராமாவதார வருகையில் ஆர்வம் காட்டாமை சமயம் சார்ந்த பின்புலம் உடையதா? நீளச் சிந்திக்கவேண்டிய தடம் இது.

அரங்கேற்றத் தடை! பின்புலம் எவை?

புலவர்கள் பற்றிய வரலாற்றுத் தொகுப்புகள் பலவும் செவிவழிச் செய்திகளை அடிப்படையாகக்கொண்டவை என்பது அறிஞர் உலகம் ஏற்றது. மாபெரும் கம்பர் இலக்கியம் அரங்கேற்றப்படுவதற்கு, அவர்காலத்தில் காட்டப்பட்ட எதிர்ப்புகள் எதனால் அமைந்தன? திருமால் அவதாரத் திருக்கதை ஒன்று, விஷ்ணு ஆலயங்களில்கூட, அரங்கேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது ஏன்? நிறைவாகத் திருவரங்கத்தில், அரங்கன் ஆசியுடன் நீண்டதயக்கத்திற்குப்பின் இராமாவதாரம் அரங்கேறியது என்ற செய்தியின் பின்னும் ஏதோ மறைந்திருப்பதுபோல் தோன்றுகிறதே! கம்பரின் குலப்பிறப்புப்பற்றிய சமூக ஏற்றத்தாழ்வின் தாக்கம் என்று கூறலாமா? ஆட்சியாளர்களால் ஏற்கப்பெறாத கவிஞர் ஒருவரை ஆதரித்தால் பிழைவரும் என்று கோயிலார் அஞ்சியிருப்பார்களா? திருவரங்கத் திருக்கோயில் கல்வெட்டுக்களில், இங்குதான் அரங்கேற்றம் நடைபெற்றது என்ற குறிப்பு ஏதும் இல்லை என்கிறார்களே உண்மையா?

வேறு சில ஐயங்கள் :

காப்பியத்துக்குள் நான் புகவிரும்பவில்லை.
வெளியிலிருந்தே வினவுகின்றேன்.

கம்பருக்குப் பின்வந்த வைணவச்சார்பு இலக்கியங்கள் மற்றும் உரைகளில் கம்பருக்கு உரிய மதிப்பும் இடமும் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மை உண்டா? இல்லையா?

சேக்கிழாருக்குச் சைவவுலகம் தரும் இடத்தைக் கம்பருக்கு வைணவ உலகம் நிறைவாகத் தந்துள்ளதா?

தமிழ் இலக்கியங்களின் நூற்றுக்கு மேற்பட்டவற்றைப் பதிவு செய்யும் 'தமிழ்விடுதூது' கம்பரையோ அவர் காப்பியத்தையோ குறிப்பிடாது செல்வது தற்செயலாய் நிகழ்ந்ததா? வேண்டுமென்றே செய்யப்பெற்றதா? எனின், ஏன்?

கம்பரின் கவிதை ஒன்றில் ஐம்பது குறை காணப்பட்டதும்; பின் அவைகள் நிறைவாகச் சித்தரிக்கப்பட்டதும் நூல்வடிவம் பெற்றுள்ளதே! உண்மையிலேயே அவர் கவிதை குறையுடையது தானா?

கம்பனில் வினவப்படவேண்டிய வினாக்கள் மேலும் பலவுண்டு.

விரிவஞ்சி விடுக்கிறேன்.

மேற்குறித்த வினாக்களுக்கு நடுநிலையோடு விடை காணப்படுமானால் தமிழ் இலக்கியங்கள் பற்றிய வியப்பூட்டும் உண்மைகள் பல வெளிப்படக்கூடும். அரசியல், சமயம், சாதி பற்றிய பல காரணங்களால் இலக்கிய உருவாக்கம் எவ்வெவ்வாறெல்லாம் துயர் உறுத்தப்பட்டுள்ளது என்பதும் போதரும்.

அறிஞர்கள் ஆராயட்டும்!

தாலாட்டில் முகிழ்க்கும் பக்திச்சுவை

திரு. வி. சா. பாலசுப்ரமணியன்,
பேராசிரியர்,
தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்.

தமிழ் நாட்டில் பல்வகை நாட்டுப்புறப் பாடல்கள் இன்றும் வழக்கில் உள்ளன. இவற்றில் நம்பண்பாடு, நாகரிகம் உள்ளிட்ட அரிய செய்திகள் கூறப்படுகின்றன. இவற்றுள் தலை சிறந்து நிற்பது தாலாட்டு. 'தாலப்பருவம்' என்று பிள்ளைத்தமிழில் புலவர் பாடுவதனையும் இங்கு நினைவுகூர்க. பச்சிளக்குழந்தைக்குப் பாலூட்டும் தாய், பக்தியையும் சேர்த்தூட்டுவது கண்டு மனம் நெகிழாதார் இருக்க முடியாது.

குழந்தையைச் சீராட்டி, தூளியில் அதனைத் தூங்க வைக்கும் போது அத்தாயின் மனத்தில் தான் எத்தனை கற்பனைகள்! எண்ண அலைகள்! இவற்றுள் தலைதூக்கி நிற்கும் கருத்துக்கள் பல 'பக்தி' சம்பந்தப்பட்டவை. தன் குழந்தையின் குடிப்பெருமை, தாத்தா, பாட்டி, தாய், மாமன் இன்னபிறரையும் சேர்த்துப் பாடும் தாய் அவர்களும் பக்தியில் சிறந்து விளங்குவதனையும் பாடுதல் காணலாம். சுருக்கம் கருதி, பக்தி சம்பந்தப்பட்ட ஒரு சில எடுத்துக் காட்டுக்களே இங்கு இடம் பெறுகின்றன.

பக்தி :

பச்சிளங் குழந்தைப் பருவத்திலே ஊட்டப்படும் உணர்வு குறிப்பாக பக்தி உணர்வு பசுமரத்தாணிபோலப் பதியும் என்று கூறவேண்டுவதில்லை. குழந்தையின் எதிர்காலம் பற்றிய கற்பனையிலே மூழ்கித் திளைக்கும் தாய், அவையெல்லாம் நிறைவேற தெய்வங்களின் திருவருள்வேண்டும் என்ற குறிப்போடுபாடுகிறாள். இதில் விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, சிவன், பார்வதி, திருமால், லட்சுமி என்றிப்படி தெய்வப்பெயர்கள் இடம் பெறும் பக்தி மிக்க இச்சூழ்நிலை நம்மைப் பரவசப்படுத்துகிறது.

தலச் சிறப்புகள் :

சிவத்தலங்களின் சிறப்புடையன சிதம்பரம், காஞ்சிபுரம், திருக்குற்றாலம் முதலியன. இத்திருக்கோயில்களில் உருவத்

திருமேனிகொண்டு எழுந்தருளும் சிவனே, தன் மகனாக அவதரித்துள்ளான் என்பதாக ஒரு தாய் குறிக்கிருள்.

" பால்சொரியும் தில்லை, குற்றாலம்
தேன்சொரியும் காஞ்சிவனம், சிவதலமும் உள்ளவனே "

என்ற அடிகளில் சிவத்தலப் பெருமை முதலியன சுட்டப்படுகின்றன.

விநாயகர் :

விநாயகரை நினைத்துத் தாலாட்டும் ஒரு தாய் அவருக்குப் பிடித்தமான பால், பழம், பச்சரிசி, எள்ளுருண்டை முதலியவற்றையும் சுட்டுகிருள், அப்பெருமானை வணங்கி வழிபட்டதால் 'நீ வந்து பிறந்தாயோ' என்று குழந்தையைப் பார்த்துப் பாடுகிருள்.

" பாலும் பழமும் விநாயகனுக்குப், பச்சரிசி எள்ளுருண்டை
நாலுவிதம் படச்சு என்கண்ணே, நீநாடாள வந்தவனே "

என்றுவேட்கும் தாயின் மனப்பூரிப்பைஇவ்வடிகள் காட்டுகின்றன.

முருகன் :

முருகன், வள்ளி, தெய்வானை குறிப்புகள் தாலாட்டில் மிகுதியும் இடம்பெறுகின்றன. அந்த முருகனே தன் மகனாக வந்து பிறந்துள்ளான் என்று பாடும்போது பாசமும் பக்தியும் விஞ்சி நிற்பது காணலாம்.

" ... ... நீ பழனிப்பதி வேலவனோ?
அள்ளி அள்ளி பூசைகொள்ளும் என்கண்ணே, நீ ஆறுமுக
வேலவனே ... ... "

என்று வள்ளியை மணக்கவந்த முருகனே, என்று இன்னொரு தாய் பாடுவாள். அதில் வள்ளியின் வரலாறே சுருக்கமாய் இடம் பெறுகின்றது.

" ... ... வண்டாடப் பூமலர வள்ளி புனங்காக்க
வண்டாரோ வேல்முருகர் ... ...
தினைப்புனமும் காத்த வள்ளி, திகைத்து நிற்கும் வேளையிலே
குருந்தடி மண்ணெடுத்து, குழந்தையின்னு தந்தாரோ "

என்ற தாலாட்டு வரிகள் மனத்தைத் தொடுகின்றன.

சிவன் பற்றிய சிந்தனைகள் :

தாலாட்டில் சிவன், மீனாட்சி பற்றிய குறிப்புகளும் மிகுதி. பஞ்சாட்சரத்தின் மகிமையையும் போற்றிப்பாராட்டும் தாலாட்டுகளும் உண்டு. காட்டாக,

" பஞ்சாக்ரம் எழுதி உன்னைப்படைத்த பரமசிவன் பேரெழுதி "

என்பார் ஓர் அன்னை; இன்னொரு பெண்ணோ, அந்தப் பரமனே தனக்கு மகவாய்ப் பிறந்திருப்பதாக எண்ணிக் குதூகலம் அடைகிருள்.

" ... ... குழந்தையாய் வந்தாரோ
திரிபுரமெரித்தவரோ சிவநாம ருத்திரரோ "

என்பன அவ்வடிகள். இன்னொரு அன்னை தன் குழந்தையைப் பார்த்து, நீ எங்கிருந்து வந்து அவதரித்தனை? என்று கேட்டு அக்குழந்தையே அதற்கு விடையளிப்பதாகவும் பாடி, சிறு பக்தி மணம் கமழச்செய்கிருள். குற்றாலநாதரின் கோபுரத்தில் புருவாக இருந்த அந்தப்பறவை தன் வயிற்றில் மகனாகப் பிறந்தது என்பதனை அவள்,

" என்கொஞ்சும் புருவே நான் கூப்பிடும்போது எங்கிருந்தாய்?
குற்றால நாதர் கோபுரத்தில் மேலிருந்தேன் "

என்று வினவிடையாகப் பாடுவாள்.

திருவிளையாடல் :

திருவிளையாடலையும் தாலாட்டில் அமைத்துப்பாடி மகிழ்வர் தமிழர் அன்னையர். மாசி மாதம் மதுரையிலே திருவிழா; அன்னை மீனாட்சி, மதுரைத் தெப்பக் குளத்தில் மூழ்குவாள். ஐவகை கிண்ணத்தில் சந்தனம் முதலியன உண்டு. அவற்றைப் பூசிக் குளிப்பாள். இதனால் அப்பொய்கையெல்லாம் சந்தனம் மணக்கும். பிட்டுக்கு மண்சுமந்த பெம்மான் பிரம்படி படுவார்; மாசித் தேரிலே மதுரையிலே வலம்வருவார் என்பதனை,

" மாசித்திருவிழா மதுரை மீனாட்சி தெப்பத்திலே
மூழ்கிக் குளித்தாளாம்; மணக்கும் சந்தனமாம்
பிட்டுக்கு மண்சுமந்து, சொக்கர் பிரம்பாலடிப்பெற்று "

எனவும்,

" பாண்டியர்க்கு மண்சுமந்து, பாதங்கள் சேருடி ... ...
கடல் நெருங்கி குடிதழைக்க வந்தகண்ணே "

என்றும் பாடுவதில் திருவிளையாடல் நிகழ்ச்சி இடம் பெறுதல் காணலாம்.

திருமால் :

தமிழர்கள் போற்றி வணங்கும் தெய்வங்களுள் திருமால் ஒருவர். அவரது இராமாவதாரம் பற்றிய குறிப்புக்களும் தாலாட்டில் தாயின் இனிய தமிழிலே காணப்படும்.

" ... ... தாயி கைகேயி சொற்படிக்கு தாமமுடி சூடாமல்
சீதையுடன் கானகத்தே சென்ற பெருமானே
பொன்மானின் பின்போன புத்திரனே நித்திரையோ
ஸ்ரீராமரெனும் திருநாமம் பெற்றவனே "

என்பதில் இராமாயணத்தின் கதைச்சுருக்கமே ஒரு சில அடிகளில் படம் பிடித்துக் காட்டப்படல் கண்டு மகிழலாம்.

சிவபூஜை :

திடீரென்று தாலாட்டில் மட்டும் பக்தி வந்துவிடவில்லை. அக்குடும்பமே சைவக்குடும்பம் பரம்பரையாக சிவபூஜை செய்து வரும் மரபினர் கொண்டது. அதனால் தான் மதுரை சொக்கரும், மீனாட்சியும் அருள்செய்யப் பிறந்தாயோ என்ற அடிகளில் இவ்வுண்மை புலப்படுதல் உய்த்துணர்க.

" ... ... சிவனே வணங்கி
என் கண்ணே — நான்சிவபூஜை செய்கையிலே
கோயில் இடமெல்லாம் என்கண்ணே
நான் குழந்தை வரம் கேட்கையிலே ... ... "

என்பது அத்தாலாட்டு.

முடிவுரை :

இங்ஙனம் பக்திமட்டுமின்றி, மனிதவாழ்வின் இலட்சியமாகிய புண்ணிய முதலியவற்றையும் இயற்றுதல் வேண்டும் என்ற கருத்தும் தாலாட்டில் இழைந்தோடுதல் காணலாம். திருக்கோயிலுக்கு

விளக்கிடுதல், குளம் வெட்டுதல், திருமடங்கள் கட்டுதல், பாடசாலைகள் அமைத்தல் முதலியன மேற்கூறிய அறச் செயல்கள். இதனை,

" எட்டாத கோயிலுக்கு ஏணிவைத்தே தீபமிட்டேன் "

எனவும் குழந்தையையே குலவிளக்கு என்று உருவகம்செய்ததனை,

" குலக்கொழுந்தோ குஞ்சரமோ கோவில்மணி விளக்கோ "

என்றும்,

" குளிக்கக் குளம்வெட்டி, கும்பிடக் கோயில் கட்டி
மதிக்க மடங்கள் கட்டிவைக்கும் மகாராஜாபேரனே
பாடசாலைகட்டிப் படிக்க வைப்பார் பேரனே
வித்தக சாலைகட்டி விளங்கவைப்பார் பேரனே "

எனவும் வரும் தாலாட்டுகள் மூலம் அறியலாம்.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
மதுரை ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத்திற்கு
29—12—89 ஆம் நாள் எழுந்தருளியபோது நிகழ்ந்த
திருவடிப் பூசையில் சமர்ப்பித்த

பாமலர்

கருமமே கண்ணாய் நியமந் தவரு
தருமைத் தமிழோ டிசையும் பயின்று
தருமைக் கழியாப் பெருமை தருமெங்
குருவருள் வெல்கவே நாளும்.

பி. டி. ஆர். கமலைத்தியாகராசன்.
தலைவர்,
மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

டாக்டர் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி.

முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

கண்ணிருந்தும் பார்க்காத பரிதாபம் :

பதுமையை விட்டுச் சீவகன் பிரிந்தபோது, துக்கத்தால் பலவாறு கூற்றிய பதுமை மயிலினைப்பார்த்து, துயிலில்லாத ஒளி பொருந்திய நீண்ட கண்களை நீ பெற்றிருக்கிறாயே - சீவகனை நீ பார்த்துண்டா என்று வினவுகிருள். தோகையின் கண்கள் பாவைக்குப் பரிதாபம் தெரிவித்திருக்க வேண்டும், இந்த நயமான பாடல் சிந்தாமணியில் வருகிறது.

மையில் வாணெண்டுங் கண்வள ராதன
மெய்யெ லாமுடை யாய்மெய்ம்மை காண்டிநீ
ஐயன் சென்றுழிக் கூறுக - என்று ஆய்மயில்
(பதுமை) கையினுல் தொழுதாள். (சிந். 1366)

கம்பர் பெண்கள் தான் பேதமையால் புலம்புவார்கள் என்று சிந்தாமணி கூறியது ஒருபக்க உண்மைதான்; ஆண்களும் கூட ஆண்மை மறந்து காதல் அவசத்தில் புலம்பல் உண்டே - இதோ இராமனே சான்ருகிருன் என்று பிறிதோர்பக்க உண்மையைக் காட்டுகிருர்.

ஓடாநின்ற களிமயிலே சாயற்கு ஒதுங்கி உள்ளழிந்து
கூடாதாரின் திரிகின்ற நீயுமாகம் குளிர்ந்தாயோ
தேடாநின்ற என்னுயிரைத் தெரியக்கண்டாய் சிந்தையுவந்து
ஆடாநின்ருய் ஆயிரங்கண் உடையாய்க்கு ஒளிக்குமாறுண்டோ
(கம். 3734)

விடிந்தது பொழுது, வடிந்தது துன்பம் :

இரவுக்காலம் துன்பத்தை அதிகமாக்கும் இயல்புடையது, சிறப்பாகக் காதல் நோய் கொண்டோர்க்கு இரவு பகையேயாகி விடும்.

காலைக்குச் செய்த நன்று, என்கொல் வென்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை

என்பாள் வள்ளுவர் தலைவி. காலைக்கு நட்பையும் மாலைக்குப் பகையையும் நான் செய்தேனா? எனக்கு ஏன் அது நட்பாக (நன்று நட்பு) இது பகையாக இருக்கிறது என்பதைச் சிந்தாமணிப் பதுமையிடம் பார்க்க வைக்கிறார் தேவர், சீவகனைப் பிரிந்து வருந்திய பதுமை ஒருவாறு மனந்தேற, பொழுது புலர்ந்தது. இவள் வாட்டமும் புலர்ந்தது. (புலர்ந்தது - தெளிவடைந்தது) என்கிறது சிந்தாமணி.

புலர்ந்தது பொழுது நல்லாள் நெஞ்சமும் புலர்ந்ததன்றே

(சிந். 1397.)

கம்பர் சூரியன் எழுந்தபோது துன்பங்களுக்கும் விடிவுவந்தது என்பதைக் காட்டுகிறார், சீதையைத் தேடிக்கொண்டு நடக்கும் இராமனின் மனத்துயர் காலையில் விடைபெற்றது என்பது இராமாயணச் செய்தி.

... ... முடிவு இல்
கங்குல் இற்றது, கமலம் முகமெடுத்தன கடலின்
வெங்கதிர்க் கடவுளெழ விமலன் வெந்துயரினெழ

கம். 3749)

தாமரையும் தண்பனியும் :

எல்லிம் விளக்கமுறும் தாமரைகள் அல்லில் குவிந்து போவது அறிந்தசெய்தியே. பனியில் தாமரை நிறம்சிதைந்து உருக்குலையும் என்பது அநேகமாகத் தெரியாதசெய்திதான். சீவகன் பதுமையை விட்டுப் பிரிந்த போது அவளது தாய்மார்கள் (நற்றாய், செவிலிகள்) அனைவரும் மெய்சுருகிச்சாம்பினர்.

தாயரெல்லாம், தண்பனி முருக்கப்பட்ட தாமரைக்
காடு போன்றார்.

இன்னொரு இடம் - பனியால் தாமரை நைந்து போனதன்பின் சூரியன் வரப் பிரகாசிப்பது போலச் சீவகன் பிரிவால் சோர்ந்த பதுமை - கணவன் வருவான் எனத் தாய் கூறிய சொல்லால் தெளிவும் ஒளியும் பெற்றாள் என வந்தது.

சொரிபனி முருக்க நைந்து சுடர்முகம் பெற்றபோதே
பரிவுறு நலத்தவன்றே பங்கயம் - என்பது
பதுமைக்கு உவமை யாயிற்று. (சிந். 1404.)

கம்பர் இதே கருத்தை அனுமன் வாயிலாகப் புதுமைபடக் கூறுகிறார். இராமன் ஒருமனைவி என்ற கோட்பாட்டுடன் வாழ்பவன். இவனது தாமரைக் கண்கள் பெண்கள் விஷயத்தில் நஞ்சாக வன்றோ உள்ளன! இவை பனிக்குத் தேயாத கஞ்ச மலர்கள் என்று அனுமன் இவன் கண்களைப் பாராட்டுகிறான்.

மஞ்செனத் திரண்ட கோலமேனிய மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிரிரும் பனிக்குத் தேம்பா
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணை! (கம். 3765.)

என்பது இராமாயணப் பாடல்.

அரிவையர் கடன் ஆண்கடன் :

பொருள் தேடுதல் போன்ற பல காரியங்களுக்காகப் பிரிதல் அக்கால ஆடவர் இயல்பு. இல்வாழ் மகளிர் அப்பிரிவை ஏற்றுப் பொறுத்தாற்றுவார்கள். இதுவே வழக்கமாக இருந்ததை சிந்தாமணி மூலமும் காணமுடிகிறது. பதுமை சீவகன் பிரிவால் வருந்தியபோது அவளது நிலை பிரிவு நெருப்புள் வேவது போலிருந்தது.

மல்லுறை அலங்கல் மார்பன் பிரிவெனும் எரியுள் வீழ்ந்து
வில்லுறை புருவமாதர் வெந்தனள் கிடப்ப - (சிந். 1500)

என்று வரும். இதுமட்டுமல்ல சீவகன் வாய்மொழியே கூட இதனை வற்புறுத்தியுள்ளது என்பதைப் பதுமையே கூறுகிறாள்.

விளைக்குஞ் செய்பொருட் கும்வெயில் வெஞ்சுரம்
நினைத்து நீங்குத லாண்கட னிங்கினிற்
கனைத்து வண்டுணுங் கோதையர் தங்கடன்
மனைக்கண் வைகுதல் மாண்பொ டெனச் சொன்னான்.

(சிந். 1400.)

கம்பர் அன்புநிறை உள்ளத்தினளான பெண்ணால் பிரிவுத்துயரை எப்படிப் பொறுக்க முடியும் என்று கேட்டு இன்பத்திலும், துன்பத்திலும் அவள் கணவனைப் பின்தொடரும் உள்ள முடையவளே என்பதைப் புரியவைத்தார். இப்படிச் சிந்தாமணிக்கு மாறுபட்டுச் சிந்தித்து மங்கையர் குலத்திற்கு மாண்பு சேர்த்தார் இவர்.

இராமன் சிற்றன்னை கைகேயி உத்திரவுப்படி காடேக முந்திய போது, மென்மையான சீதையிடம் தன் எண்ணத்தை மெதுவாகக் கூறினன். நடத்தற் கரிதான வழிகள். அதுவும் சில நாட்கள் தான் பிரிவு. தாய்மார்களுக்குப் பணிவிடையும் செய்தல் வேண்டும். அதனல் நீ இங்கே இரு - என்ற சொல் கேட்ட அளவிலேயே சீதை உயிரில்லா உடலானள் என்பதை இராமனே பின்பு நினைந்து கூறுவதாகக் கம்பர் எழுதினர்.

நடத்தற் கரிது என்றெல்லாம் நீ சமாதானம் கூறுவது என்னை? உன் மனத்தில் பரிவு இல்லை. கதிரவன் எரிக்கும் வனம் உன் பிரிவைக் காட்டிலும் சுடுமோ! என்று கேட்டுச் சீதை சீரை யணிந்து இராமனைப் பின் தொடர்ந்தாள் என்பது இராமாயணம்.

பரிவு இகந்த மனத்து ஒருபற்றிலாது
ஒருவுகின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ஈண்டுநின்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள். (கம். 1827.)

கம்பர் தேவருக்கு முரண்பட்டாலும் பெண்மைக்கு
அரண் செய்து பெருமை பெற்றார் எனலாம் அன்றோ! (வளரும்)

கடிதம்

மு. பா. ஸ்ரீநிவாசன்

1, 28 ஆவது தெரு,
நங்கை நல்லூர்
சென்னை - 61.

ஞானசம்பந்தம் எனக்குப் பாராயண நூல். வரிவரியாகப் படித்து, மீண்டும் மீண்டும் வாசித்து அனுபவிப்பது எனது வழக்கம். அதன் தமிழ்ச் சுவையும் கருத்து ஆழமும் என்னைப் பெரிதும் கவர்ந்து நிற்பவை.

ஞானசம்பந்தம் இதழில் காவேரி பற்றியும், கான்சருக்கு மஞ்சள் மூலம் நிவாரணம் பற்றியும் அமைந்த கட்டுரைகளையும், திருவையாற்றில் நடந்த திருமுறை வேள்வியில் நிகழ்த்திய ஆசியுரையையும் ஏனைய விஷயங்களையும் பூரணமாக அனுபவித்தேன்.

அன்பன்,
மு. பா. ஸ்ரீநிவாசன்.

தாயின் அணைப்பு

வித்துவான் திரு. சி. குமரேச பிள்ளை
சுசீந்திரம்.

சிவஞானபுரம் தொடக்கப்பள்ளி மணி கணீர், கணீர், கணீர், கணீர் என ஒலித்தது. நீலகண்டன் பள்ளியை விட்டு வீடு நோக்கி வழக்கம் போல் விரைந்தான். தன்னை எதிர்பார்த்துக் கொண்டு வாசற்படியில் இருக்கும் தன் முதல் மனைவி மகள் கலாவை அன்று காணவில்லை அங்குமிங்கும் பார்த்தவாறே தன் அறைக்குள் நுழைந்தான் அவன்; காலுறை, சட்டைகளைக் கழற்றி மாட்டி விட்டு வேட்டி கட்டிக்கொண்டு நாற்காலியில் அமர்ந்தான். இரண்டாம் மனைவி சுந்தரி, இடுப்பில் தன் ஒரு வயது குழந்தை, கையில் காப்பி, கடுகடுத்த முகம் இவற்றோடு அறைக்குள் விர் என்று நுழைந்தாள். காப்பிகப்-டக் என்ற ஒலியோடு மேசை மீது அமர்ந்தது. 'கலா எங்கே' என்று சுந்தரியிடம் கேட்க வேண்டும் என்று நீலகண்டன் உதடுகள் துடித்தன; சுந்தரியின் முகத்தைப் பார்த்தான்; அவள் முகத்தோற்றம் அவன் உதடுகளை அசைய விடவில்லை. சுந்தரியே பொரியலானாள்.

"என்னங்க! அந்தச் சனியன் தொல்லை நாளுக்குநாள் அதிகப் பட்டுப்போச்சு; நான் கைக் குழந்தையும் கையுமா என்ன வெல்லாம் செய்யறது; கூடத்தில் குழந்தையைப் பார்த்துக்க சொல்லிட்டு அடுக்களைப் பக்கம் போனேன்; நான் வரதுக்குள்ளே குழந்தையைக் கீழே தள்ளிட்டு மூலையிலே போயி கல்லுப் பிள்ளை யாரு மாதிரி உட்கார்ந்திட்டிருக்கா; நீங்க கொடுக்கிற செல்லம் அதிகமாய்ப் போச்சு; அந்த மூ ......" வார்த்தைகளைச் செவிமடுக் காமலே கூடத்திற்கு வந்தான் நீலகண்டன். கலா கூடத்தின் ஒருமூலையில் அழுது கொண்டிருந்தாள். அருகில் சென்றான் அவன். 'அப்பா' என்று தந்தையை அணைத்துக் கொண்டாள் கலா.

அவனும் குழந்தையை அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்து முதுகைத் தடவினான். முதுகில் ஐந்து விரல்களும் பதிந்திருந்தன. இரத்தம் கன்றியிருந்தது. நான்குவயதுகுழந்தை;

அதற்கு என்ன தெரியும்? இப்படியா அடிப்பது; அதுவும் தாய் இல்லாக் குழந்தையை ... அவன் உள்ளக் குமுறல் இது. வாய் திறந்து சுந்தரியிடம் கேட்கத் துணிவு இல்லை. கலாவை எடுத்துக் கொண்டு நீலகண்டன் தன் அறைக்குச் சென்றான். கட்டிலில் அவளைப் படுக்க வைத்தான்; அருகில் அமர்ந்து முதுகைத் தடவிக் கொடுத்தான். சிறிதாக சுரம் காணப்பட்டது. மருத்துவரிடம் கொண்டு செல்வோமா! காலையில் பார்த்துக் கொள்வோம்......; அருகில் படுத்துக் கொண்டான். மேசையின் மேல் வைக்கப் பட்டிருந்த காப்பியை எடுத்து, சன்னலவழியாகக் கொட்டிவிட்டு அங்கிருந்து அகன்றாள் சுந்தரி.

கலா தூங்கிவிட்டாள். இமைபொருந்தாமல் படுத்திருந்தான் நீலகண்டன். சுவரில மாட்டப் பட்டிருந்த முதல் மனைவி கலையரசியின் படம் அவன் கண்ணில் பட்டது. அவன் சிந்தனைசிறகடித்தது. பின்னோக்கிப் பறந்தது.

மரணப்படுக்கையில் கலையரசி; ஒருவயது குழந்தை அவள் மார்பில் படுத்திருக்கிறது. தன் இருகரங்களையும் பிடித்து, குழந்தையின் மேல் வைத்துக் கொண்டு கண்ணீர் வடியக் கலையரசி படுத்திருந்த காட்சி.

நீலகண்டன் கண்கள் நீரைச் சிந்தின. நான் இனி உயிர் வாழ்வது சிறிது நேரந்தான். குழந்தையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; என்பெயரையே அவளுக்குச் சூட்டுங்கள்; உங்கள் மகிழ்ச்சிதான் என் லட்சியம் ... எது செய்தாலும் குழந்தையின் நன்மையைக் கருதியே செய்யுங்கள் ... மறந்து விடாதீர்கள் அத்தான்... மறந்...த்...து. கலையரசியின் நாக்குக் குழறியது; விழிகள் மேலே சொருகின. நீலகண்டன் கண்கள் கண்ணீர் சொரிந்தன.

அருகில் படுத்திருந்த குழந்தையை அணைத்துக் கொண்டான். உன் அம்மாவின் நினைவு அகலாமல் இருக்கத்தானே உனக்குக் கலையரசி என்றே பெயர் சூட்டினேன் ... கலா ... கலா ... நல்ல உறக்கம்.

அவன் கண்கள் அகலச் சுழன்று கொண்டிருந்தன. சுவரில் தானும் சுந்தரியுமாக எடுத்துக்கொண்ட படம் கண்ணில்பட்டது.

சுந்தரி ... கலாவை, தன் பிள்ளையைப் போல் பாதுகாத்து வருவேன் என்ற வாக்குறுதியை மட்டும்தானே வரதட்சணையாகப் பெற்றுக் கொண்டு உன்னைத் திருமணம் செய்து கொண்டேன்.

நன்ருகத் தானே கவனித்து வந்தாய்... உனக்கென்று ஒரு குழந்தை பிறந்தவுடன் இப்படி மாறி விட்டாயே...

கலா, அப்பா ... என்று தன்னை அழைத்து ஏதாவது கூற வரும்போது, சுந்தரி அவளை அதட்டி உள்ளே அழைத்துச் சென்ற பல நிகழ்ச்சிகள் அவன் கண்முன் வந்து நின்றன. கொடுமைக்காரி... கொடுமைக்காரி... அவன் வாய் முணு முணுத்தது.

சுந்தரி கூடத்தில் அடுத்த வீட்டு முத்துப்பாட்டியிடம் பேசிக் கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது.

"கேட்டிங்களா பாட்டி இந்த அநியாயத்தை! என்பிள்ளையைக் கீழே தள்ளிட்டா அந்தப்பிள்ளையை ஏனென்று கேக்கவே இல்லே, இந்தப் பிள்ளையை எடுத்தாவது ஆறுதல் சொன்னரா?

"வருத்தப்படாதே சுந்தரி; இந்த காலத்திலே ஆம்புளைகளே இப்படித்தான்-சுந்தரிக்குத் தூபம் போட்டாள் முத்துப் பாட்டி.

"டிபன் பண்ணி வச்சிருக்கேன்; வேணும்ணு அவர் எடுத்துச் சாப்பிடட்டும்.

"என்னடி பண்ணிருக்கே"

"ரவா தோசை;

"நீ பிள்ளைத் தாய்ச்சி, பட்டினி கிடக்காதே; சாப்பிட்டுட்டு படு நான் வரேன்."

"பாட்டி இருங்கோ சுந்தரி உள்ளே சென்று இரண்டு ரவை தோசை கொண்டு வந்து பாட்டியிடம் கொடுத்தாள்.

"எனக்கெதுக்கம்மா" என்று நாவளவிலே கூறிவிட்டு, கையில் தோசைப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு வந்த காரியம் கைக்கூடிய மகிழ்ச்சியில் வீடு திரும்பினுள் முத்துப் பாட்டி.

கலாவை அணைத்துக் கொண்டதும் கண்ணயர்ந்து விட்டான் நீலகண்டன்.

மனத்திரையில் கலையரசி வந்து நின்ருள்.

"அத்தான் சாம்பிடாமல் தூங்கிட்டீங்களே, இந்தாங்க ரவாதோசை, சாப்பிடுங்க; பிட்டுப் பிட்டுக் கொடுத்தாள் மனைவிகலையரசி.

அவள் கொடுத்துக் கொண்டே இருக்க, நீல கண்டனும் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான். வயிறு நிறைந்த பாடில்லை. 'கலா இன்னும் கொடு...'

'நீங்க சாப்பிட்டுட்டே இருங்கோ; நான் குழந்தையை எடுத்துட்டு சுசீந்திரம் கோவிலுக்கு போறேன்...'

'கலா! நில் ... நில். நானும் வரேன், நில் கலா... கலா'

நீலகண்டன் தூக்கம் கலைந்து எழுந்தான். தன் எதிரே சுவரில், கண்ணாடி பிரேமிற்குப் பின்னால் நின்று குழந்தையுடன் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மெதுவாகச் சென்று நடுங்கும் கரங்களால் அவளுடைய படத்தைக் கையில் எடுத்தான். கைதவறிப்படம்கீழே விழுந்து உடைந்து விட்டது. அவனுடைய மனத்தைப்போல் அதுவும் சுக்குநூறாகி விட்டது.

அந்தஒலியில் குழந்தை கலா விழித்துஅழுதாள். அம்மா... அம்மா...

துக்கம் நிறைந்த மனத்தோடு குழந்தையைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொன்னான்.

அதிகாலை மூன்று மணிக்கு சுசீந்திரம் கோவிலில் அடிக்கப் படும் மணி ஓசை காற்றில் மிதந்து வந்தது காதில் விழுந்தது. சிந்தனை அங்கு மிங்குமாகத் தட்டாம்பூச்சிபோல் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

கடிகாரம் ஐந்து அடித்தது. மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு குழந்தை கலாவுடன் வெளியேறினான்.

"சிவஞானபுரத்திலுருந்து சுசீந்திரம் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாக, கலாவைக்கையில்பிடித்துக் கொண்டு நடந்து சென்றான் நீலகண்டன்."

'அப்பா... அதோ தெரிகிறதே... அதுதானே கோபுரம்.'

'ஆமாம்மா; அதுதான் சுசீந்திரம் கோவில் கோபுரம்'

'இங்கு சித்தி கூட என்னையும் ஒருநாள் கூட்டிட்டு வந்தீங்களே'

'ஆமா... இன்றும் அங்குத்தான் போகிறோம். அந்தத்தாணு மாலையனிடம் நம் குறையை முறையிடத்தான் போகிறோம்'

வயல் கரை வழியே இருவரும் நடந்து வருகின்றனர்.

'அப்பா... இந்த வயலிலே ஏன் நெல் பயிரையெல்லாம் பிடுங்குகிறுங்க?'

'இந்த வயலிலே இப்போ வெள்ளை நெல் விதைந்து வளர்ந் திருக்கிறது. ஊடே முந்தினபயிர் சம்பாவும் வளர்ந்திருக்கிறது. அதைத்தான் பிடுங்குகிறார்கள்.

"அதை ஏன் பிடுங்க வேண்டும்?"

"சம்பா பயிரைப் பிடுங்கினால் தான் புதிய வெள்ளைப் பயிர் நன்றாக வளரும்."

என்னப்பா!... இரண்டும் ஒன்ருக வளராதா?

" ... ... "

இருவரும் ஒரு வாழைத் தோட்டம் வழியாக நடந்து செல்கின்றனர்.

அப்பா! இந்த வாழைக் கன்றுகளை இங்கே ஏன் நடுகிருர்கள்?

இக்கன்றுகள் வேறுதோட்டத்தில் நின்றவை. அங்குத்தாய் வாழை அழிந்து விட்டது. ஆகவே அங்கு நின்ற கன்றுகளைப் பிடுங்கிக் கொண்டு வந்து இங்கே நடுகிருர்கள்.

"ஏன் இங்கே நடவேண்டும்?"

"இது பண்படுத்தப்பட்ட நிலம்; இங்கே நட்டால் நன்ருக வளரும்."

புரிந்தும் புரியாததுமாகப் பின் தொடர்ந்தாள் கலா.

' அப்பா... ... எனக்குப் பசிக்குது.'

சுசீந்திரம் வந்துவிட்டது, கடையில் போய் இட்லி சாப்பிடலாம்.

" வேண்டாம் அப்பா ... அன்னிக்கு கோயிலிலே பாயசம் வாங்கிக் கொடுத்திங்களே ! அதுபோல இன்னிக்கும் வாங்கிக் கொடுங்களேன். "

' ஓ ... தாராளமாக வாங்கித்தருகிறேன்;

இருவரும் திருக்குளத்தில் நீராடி தாணுமாலயனைத் தரிசித்து விட்டுக் கோபுர வாயிலருகே வந்து அமர்ந்தனர். கோவிலில் வாங்கிய பாயசத்தைச் சிறுகச்சிறுக எடுத்து,கலாவிற்குஊட்டிக் கொண்டிருந்தான் நீலகண்டன்.

" என்ன நீலகண்டன் இங்கே அமர்ந்திருக்கிருய்? "

குரல் வந்த திக்கில் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் தன் தமிழாசிரியர் குமரனுர் வந்து நின்ருர். எழுந்து கால்களைத் தொட்டு வணங்கினுன். 70 வயதிலும் பெயருக்கேற்ற முகம் பொலிவைக் கண்டான் அவரிடம்.

" ஐயா ! ... " நீலகண்டனின்நா தழு தழுத்தது.

" வா ! நம் விடுதிக்குப் போவோம்"

ஆசிரியரை இருவரும் பின் தொடர்ந்தனர்.

" மாடிக்கட்டிடம், தருமபுர ஆதீனமடம், குருஞானசம் பந்தர் பணிமன்றம் " என்ற பெயர்ப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது.

ஆசிரியருடன் உள்ளே சென்றனர். ஆசிரியர் காட்டிய இருக்கையில் அமர்ந்தான் நீலகண்டன்.

" ஐயா ! ... தாங்கள் ... "

" ஆமாப்பா, நான் இப்பொழுது இந்தப் பணிமன்றத்தை நடத்தி வருகிறேன். இங்கு ஐம்பது அனாதைச் சிறுவர்களை ஆதரித்து வருகிறேன். வயது காலத்தில் இப் பணி மனத்திற்கு அமைதியைத் தந்து கொண்டிருக்கிறது.

"ஐயா..." கலாவின் முகத்தைப் பார்த்தான். நீலகண்டன். கண்களில் நீர்மல்கியது.

" நீலகண்டன். நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். உன் நிலையைப் புரிந்து கொண்டேன் "

மேசையின் மேலிருந்த அழைப்பு மணியை ஒலித்தார் குமரனார். முப்பது வயதுடைய பெண் ஒருத்தி வந்து நின்றாள்.

செல்வி ! ... இந்தக் குழந்தை ... !

செல்வி குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டாள்.

கலாவுக்கு இது புதுஅநுபவமாக இருந்தது. தாயின் அணைப்பை அறியாதகுழந்தை, செல்வியின்முகத்தைஏறிட்டுப் பார்த்தது.

கலாவின் சிந்தனை பின்னோக்கிச் சென்றது. " என் அம்மா செத்துட்டா, செத்தவங்கசாமிகிட்டே இருப்பாங்கன்னு அப்பா சொன்னாங்களே ... இவங்க எவ்வளவு அன்பா இருக்காங்க. ஒருவேளை இவங்க தான் என் அம்மாவோ?

அந்தப் பிஞ்சி உள்ளத்தில் எழுந்த சிந்தனைகள் தேனில் விழுந்த ஈயைப் போல் பதிந்தது.

செல்வி ... இந்தக் குழந்தையை நம் விடுதியில் சேர்த்துக் கொள்வோமா?

ஐயா ... ! சேர்த்துக் கொள்வோம். இந்த ஐயாவின் முகத்தைப் பார்த்தால் ... .

" ஆமாம்செல்வி ... ஒன்றும் பேசத் தோன்ற வில்லை "

நீலகண்டன் எழுந்தான், " ஐயா ... நான்வருகிறேன். குழந்தையைப் பார்க்க அடிக்கடிவருவேன். " என்று கூறித்தன் ஆசிரியருக்கு வணக்கம் செய்தான்.

குழந்தையைத் தூக்கி முத்தமிட்டான் நீலகண்டன். கலா ... இவங்க தான் உன்அம்மா. நான் போய்வருகிறேன். என்று கூறி விட்டு எழுந்தான். குழந்தைக்கு டா ... டா காட்டினான்.

கலாவும், செல்வியின் அணைப்பில் இருந்தவாறே அப்பா ... டா ... டா ... என்று கையை அசைத்தாள்.

கோச்செங்கட்சோழர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.லிட்.

தருமபுரம்

[திருத்தருமை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 1—7—90 ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக்கிழமையன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

ஆதீனக் கல்வி நிலையங்கள் கோடை விடுமுறைக்குப்பின் திறக்கப்பட்டுச் செயற்பட்டுக்கொண்டிருந்தன. அவற்றுக்குத் தேவையான இருக்கைகள், மரத்தளவாடங்கள் புதியனவாகச் செய்யப்பெற்று ஆதீனத்திருநெறியதெய்வத் தமிழ்மன்றத்தின் மேடைப் பகுதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. பார்வையிட்ட பிறகேஅவற்றைப் பள்ளி, கல்லூரிகட்குப் பயன் படுத்தப் படுவது வழக்கம். திருக்கோயில், ஆதீனம், கல்வி நிலையங்கள், பதிப்புத்துறை இப்படி ஏராளமான பணிச்சுமைகட்கு இடையேயும் நியமமாக ஸ்ரீலஸ்ரீகுருமணிகள் அன்பர்களை ஆசீர்வதித்துப் பெரியபுராண உபதேசம் செய்தருளி ஆட்கொள்ளும் பான்மையை வியந்தவாறே திருமடம் சார்ந்தோம்.

சொக்கநாதர் வழிபாடு, பாராயணம், நிறைவுற்றது. சித்திராசனத்தில் அமர்ந்துஅன்பர்கட்குத்திருநீறுவழங்கினார்கள். திருமுறைப்பாராயணம், நாமாவளி நிறைந்தது. அருளுபதேசம் தொடங்கினார்கள். அன்று கோச்செங்கட்சோழர் புராண உபதேசம் நடைபெற்றது.

சோழநாட்டில் திருஆனைக்கா என்று ஒரு தலம். அது யானையால் வழிபாடு செய்யப்பெற்றதலம் ஆதலால் ஆனைக்கா எனவழங்கப் பெறுகிறது. ஆனை-வெள்ளையானை. இதுஇந்திரன் ஊர்ந்த வெள்ளையானை அன்று. சிவகணத்தவனை புட்பகந்தன் என்பவன் வெள்ளையானையானான். மாலியவான், புட்பகந்தன் முதலானோர் இறைவனை வழிபாடு ஆற்றும் சிவகணத்தினர். அவர்கள் கயிலாயவாசிகள். சிவகணங்களில்பொறாமை, சினம் கூடாது. இருவருக்கும் பொறாமை ஏற்பட்டது. இதுபோலவே

மையல் கொள்வதும் கயிலாயத்தில் கூடாத செயல். ஆதலால் தான் ஆலால சுந்தரர் மண்ணுலகில் நம்பியாரூராக அவதரித்த நிலை இறைவனல் ஆயிற்று. பொருமை காரணமாகப் பெற்ற சாபத்தால் மாலியவானும் புஷ்பகந்தனும் சிலந்தியும் ஆனையு மாக முறையே ஆயினர். இருவரும் இறைவன் திருவருள் வலத்தால் ஆனைக்காவை அடைந்து வழிபட்டனர். யானை காவிரி நீர் முகந்து வந்து திருமஞ்சனம் ஆட்டும். சிலந்தி தன் வாயின் நூலால் சிவலிங்கத்தின் மேலேபந்தரிடும். தலவிருட்ச மாகிய வெண்ணுவல் மரத்தின் இலை, சருகு முதலியன இறைவன் திருமேனியில் விழாமல் காக்கவே சிலந்தி இப்படிச் செய்தது.

வழக்கம் போல் வழிபாடு செய்ய வந்தது வெள்ளையானை, சிலந்தி தன் வாய்நூலால் வலை பரப்பியிருப்பதைக் கண்டது. "இஃது அனுசிதம் (இது தூய்மை அற்றது) எனக் கருதிச் சிதைத்தது. சிலந்தி இதனைக் கண்டது. யானையின் கை சுழன்ற தால் வலை சிதைந்தது என அறிந்தது. மறுநாள் மீண்டும் வலை சிதைத்தது. பின்னுளிலும் வெள்ளையானை அதனை அழித்தது. சிலந்தி மீண்டும் கண்டது. 'பெருமானுக்குத் திருப்பணி செய்ய யானை தடையாக உள்ளதே' எனவருந்தியது. யானையின் மேல் கோபம் கொண்டது. அதன் துதிக்கையுள் புகுந்தது! கடித்தது! துன்பம் தாங்காத யானை தரையின் மேல் துதிக்கையை மோதி வீசி நிலைகுலைந்து விழ்ந்து இறந்தது. துதிக்கையுள் அடிபட்ட சிலந்தியும் மாண்டது. பெருமான் தம்மை அன்புடன் வழிபட்ட வெள்ளை யானைக்குக் கணநாதர்பதவி அருளினர். சிலந்தியைச் சோழர் குலத்தில் பிறப்பித்து அருளினர். சிலந்தி இறை யருளால் சோழராகப் பிறந்த வரலாறே கோச்செங்கட்சோழர் வரலாறும்.

சோழர் குலத்தரசன் சுபதேவன் தன்தேவி கமலவதியுடன் சிதம்பரம் சென்று தம்மகப்பேறு இல்லாக் குறையைப் போக்க வரம் வேண்டி வழிபட்டான். பெருமான் திருவருளால் பெருந் திருப்பணி செய்த சிலந்தி, கமலவதியின் கருவில் ஒருமகவாய்க் உருக்கொண்டது வளர்ந்தது.

கருப்பநாள் நிறைவும் எய்திற்று. மகப்பேறு வேளை நெருங்கிற்று. சோதிடர்கள், "ஒருநாழிகை கழித்துப் பிறக்கு மேல் இப்பசுங்குழவி உலையார் புவனம் ஒருமூன்றும் அளிக்கும்" என்றனர். இதனைக் கேள்வியுற்ற கமலவதியார் "ஒருநாழிகை கழித்து என் பிள்ளை பிறக்கும்படி என்கால் கைகளைக் கட்டித் தலைகீழாக நிறுவுங்கள்" எனக் கட்டளை யிட்டாள். அங்ஙனமே செய்தனர் சேடியர். சோதிடர் குறித் த

காலம் நெருங்கிற்று. கட்டை அவிழ்த்தனர். அரிய தவப் புதல்வரைக் கமலவதியார் பெற்றார். "என்செல்வக் கோச் செங்கண்ணனே" என்று அழைத்தாள். உடனே இறந்தாள். என்கோ சிவந்த கண்ணை உடையவனே? எனப்பொருள்படத் தேவி கூறிய இம்மாற்றமே கோச்செங்கணான் எனப் பெயர் வடிவமானதை இடையே குறிப்பிட்டருளினார்கள். முத்து' சிப்பியினின்றும் தோன்றும். சிப்பியிலிருந்து முத்து வெளிப் பட்டவுடன் சிப்பி அழியும் - அதுபோலவே கோச்செங்கணான் பிறந்தவுடன் கமலவதி இறந்தாள்-திருவானைக்கா புராணத்தில் காணும் இவ்வுவமையைச் சுட்டி விளக்கம் அருளினார்கள்.

குழந்தை வளர்ந்தது. உரிய பருவத்தில் தன்மகனுக்கு முடிசூட்டித் தவநெறி சார்ந்து சிவலோக மடைந்தான் சுபதேவன்.

அரசேற்ற கோச்செங்கட்சோழர், சிவபுண்ணியப்பயனாலே பிறக்கும்போதேமுற்பிறப்பின்உணர்வுபெற்றார். இறைவனுக்குத் திருக்கோயில்பலவற்றைக்கட்டினார். முற்பிறப்பில்அருள்பெற்ற திருஆனைக்கா சென்று தொழுதார். அங்கு அழகிய திருக்கோயில் அமைத்தார். அதுவெண்நாவல் மரத்தினோடு சூழ அமைந்தது. சாளரம் போன்ற அமைப்புடைய இறைவன் எழுந்தருளிய பகுதியுடன் திருக்கோயில் அமைத்துள்ளது. பல சிவத்தலங் களிலும் யானை ஏற முடியாத அளவு உயரம் கொண்ட மாடக் கோயில் பலவற்றைக் கட்டினார். கோயில் கட்டியதோடு அமையாது இறைவருக்கு நித்திய நைமித்திக வழிபாடுகளுக்கு உரிய நிவந்தங்களையும் அமைத்தார். இங்ஙனம் இம்மன்னன் கட்டிய மாடக் கோயில்கள் 78 என்பர் அறிஞர்.

கோச்செங்கட்சோழன் திருநறையூரில் திருமாலுக்கும் மணி மாடக்கோயில் ஒன்று, எழுப்பினான், பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமங்கை மன்னர் இச்செய்தியினை,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்னும் அருளிச் செயலால் குறித்துள்ளார். இப்பகுதியில் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்கள் எழுப்பிய கோச்செங்கட்சோழர் சிறப்பைத்திருமங்கையாழ்வார்போற்றிப் பாடியுள்ளார்-எனச்சான்றுகாட்டி ஆய்வுவிளக்கமருளினார்கள்.

கோச்செங்கட்சோழர் சிதம்பரம் திருக்கோயில் அடைந்து தொழுது வணங்கினர். தில்லைவாழ் அந்தணர்கட்கு உறைவிடமாகப் பல மாளிகைகளை எழுப்புவித்தார் - என இங்ஙனம் வரலாற்றுப்பகுதிகளை முறையே உபதேசித்தருளியகுருமணிகள் இவ்வரசன் போலவே அரசகுலத்துப் பிறந்து அரசநீதி செலுத்தியதுடன் சமய நிலையிலும் பணிபுரிந்தவர்களாக நாயன்மாராகவிளங்கியகாடவர்கோன் கழற்சிங்கன், சேரமான் பெருமான் நாயனர், ஐயடிகள் காடவர்கோன் முதலியோர் பற்றியும் குறித்து ஒப்பீடு செய்தருளினர்கள்.

கோச்செங்கட்சோழர் பற்றிய சிலகுறிப்புக்களை நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியிலிருந்து காட்டினர்கள். இந்நாயனரைப் பற்றிஇருபாடல்கள் அமைந்துள்ளன. முதற்பாடல்,

"மைவைத்த கண்டன் நெறியன்றிமற்ருேர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர் செய்து
சைவத்து உருவெய்தி வந்து தரணி நீடு ஆலயங்கள்
செய்வித்தவன் திருக்கோச் செங்கணன்எனும் செம்பியனே"

என்பது. இப்பாடலில் சோழர் சிவநெறியன்றிப் பிறநெறி கருதாச் சிந்தையர், தெய்வக் குடியினர் எனப் போற்றப்பெற்ற சிறப்பைக் குறிப்பிட்டார்கள். இக்குலத்து உதித்த செம்பியனர் கோச்செங்கணனைச் சுந்தரர்திருத்தொண்டத்தொகையில் குறித்தருளும் போது "தென்னவனய் உலகாண்ட செங்கணன்" என்ருர். தென்னவன் என்பது பாண்டியன். கோச்செங்கணனே சோழன்! சுந்தரர் குறித்தருளியது எந்தநோக்கில்? விடைகாண அந்தாதியின் இரண்டாம் பாடலில் குறித்தருளுவதையும் காண வேண்டும். அப்பாடலில் செங்கணன் "நிம்ப நறும்தொங்கல் கோச்செங்கணன்" எனக் குறிக்கப்பட்டுள்ளான். இங்ஙனம் சுந்தரர் தென்னவன் எனவும் நம்பியாண்டார் நம்பிகள் "நிம்பநறுந் தொங்கலான்" எனவும் குறித்தருளுதல் கொண்டு உலகாண்ட கோச்செங்கணன் பாண்டிய நாட்டையும் ஆண்டவன் எனக் கொள்ளக் கிடக்கிறது. எனவே தென்னவனுமாய் உலகாண்டவன் செங்கணன் என்பது விளங்கும்; தொடரில் உம்மை தொக்கது என விளக்கம் நல்கி ஐயத்தைப் போக்கினர்கள்.

மேலும் திருத்தொண்டர் திருவந்தாதி இரண்டாம் பாடலில் "மலர்த்தில்லை ஈசனைச் சூழமறை வளர்த்தான்" என நம்பிகள் அருளினர். இது, கோச்செங்கணன் வேதமோதும் அந்தணர்க்குத் தில்லையில் மாளிகைகள் அமைத்துக் கொடுத்ததைக்

குறிப்பது. சேக்கிழார், " வாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பல அமைத்தான் " என இதனையே விளக்கினர் – இங்ஙனம் தொகை, வகை, விரிநூல்கள் முரண்படாது அமைந்திருக்கும் தன்மையினையும் புலப்படுத்தினர்கள்.

திருநாவுக்கரசர் கோச்செங்கட்சோழர் பற்றிக் குறித்த செய்திகளையும் இடையிடையே புலப்படுத்தினர்கள். திருக்குறுக்கை வீரட்டப் பதிகத்தில் " சிலந்தியும் ஆனைக்காவில் " எனத் தொடங்கும் பாடல் சோழனின் முற்பிறப்புவரலாற்றைக் குறித்துக் காட்டும் பகுதியை எடுத்துக் காட்டினர்கள். "சிலந்தி செங்கட் சோழன் ஆகச்செய்தான்" என அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகத்தில் திருஞானசம்பந்தரும் (2-63-7)

" தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண்டு அடைந்தேன் "
(7-66-2)

எனத் திருவாவடுதுறைப் பதிகத்திலும், நின்றியூர்ப் பதிகத்தில்,

" திருவும் வண்மையும் திண்டிறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவுகோச் செங்க ணன்தனக் களித்த
வார்த்தை கேட்டு நுன்மலரடி அடைந்தேன்" (7-65-1)

எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கோச்செங்கட்சோழர்க் கருளிய திறத்தைக் குறிப்பிட்டருளிப் போற்றியுள்ளமையை இடையே புலப்படுத்தினர்கள்.

திருவம்பர்ப் பெருந்திருக்கோயில், வைகல் மாடக்கோயில், தண்டலை நீணெறி, நன்னிலத்துப் பெருங்கோயில் முதலிய மாடக் கோயில்களைக் கட்டிய பெருமை இம்மன்னனைச்சாரும்.

இங்ஙனம் திருமுறை, வரலாறு, புராணம் முதலிய பல கோணங்களில் கோச்செங்கட்சோழர் வரலாற்றை ஆய்வு நோக்கோடு அருளி நிறைவு செய்தார்கள். பண்டாரக்கட்டின் வாயிலில் இன்சுவைக் கனிச்சாறு தாக சாந்திபெற அலுவலக இளைஞர்களால் உத்தரவுப்படி அன்போடு அளிக்கப்பட்டது. தாக சாந்தி பெற்று கருத்துக் குவியல்களை ஏந்திய வண்ணம் இல்லம் ஏகினோம் !

திருக்கோயில் பலசமைத்தார் திறமுரைத்த குருமணிகள்
உருக்கோலி மனத்தகத்தே உவந்தினிது போற்றிடுவாம் !

வாழ்க குருமணிகள் !

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரமோதூத-ஆடித்திங்கள்-ஆயில்யநாள் ஆலய வழிபாடு, 23—7—90 திங்கட்கிழமை தளிச்சாத்தங்குடி, மணக்கால், இராப்பட்டீச்சரம் ஆகிய தலங்களில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஓய்வுபெற்ற முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள்சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் வழங்கியருளும் பெரியபுராண அருளுரை 5—8—90 ஞாயிற்றுக்கிழமை காலை திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது.

சுந்தரமூர்த்திசுவாமிகளைநாமுய்யஅளித்தருளியசடையனர் இசைஞானியார் சிறப்புக்களை மனம்கொள விளக்கினர்கள். பெரியபுராண அருளுரை நிறைவு பெறுவதை முன்னிட்டு ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. ஆதீன அடியார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அன்பர்கள் கேட்டுப் பயன்பெற்றனர். அடுத்த அருளுபதேசம் 2—9—90 அன்று மாலை நடைபெறும்.

மகா கயிலாயக் காட்சி

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலை கண்ட நாளாகிய ஆடிமாத அமாவாசையன்று தருமை ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தரிசித்த மகாகயிலாயக் காட்சி முப்பத்து ஒன்றுவது ஆண்டு விழா 21—7—90 சனிக்கிழமை அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூசை மடத்தில் திருக்கயிலாயத்

திருவுருவப் படத்திற்கு வழிபாடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. பண்ணிசை வாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக நடைபெற்றது. நண்பகல் 1 மணிக்கு மாகேசுவர பூசைநடைபெற்றது மாலை6மணிஅளவில் பூசைமடத்தில் திருக்கயிலாப்யபதிகங்கள் என்ற தலைப்பில் டாக்டர் திருமதி ப. நிலா எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி., திருமலைச் சிறப்பு என்ற பொருளில் டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி என்ற தலைப்பில் புலவர் திரு. இரா. மருதநாயகம் எம். ஏ., கயிலை கண்ட அருளாளர்கள் என்ற தலைப்பில் புலவர் திரு. கே. கணபதி எம். ஏ., ஆகியோர் விரிவுரை ஆற்றினர். இரவு வண்ண விளக்குகளுடன் கூடிய வெள்ளி ரதத்தில் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா நிகழ்வுற்றது. திருக்கயிலாய நிலையத்தில் தரிசன வழிபாடு நிகழ்வுற்றது. தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அடியார்கள் மெய்யன்பர்கள் புடை சூழத் திருவுலாப் போந்து அருளினார்கள் - அன்பர்கள் பலர் வந்திருந்து வழிபட்டுப் பயனடைந்தனர்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா 29–7–90 ஞாயிறன்று ஆடிச் சுவாதி நாளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை சமயாசாரியர் சந்தனாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

தருமபுரத்தில் :

தருமையில் மாலை 6–30 மணியளவில் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ "சுந்தரர் தேவாரம்" என்ற தலைப்பிலும் வித்துவான் திரு.கா.ம.கண்ணப்பன்,எம்,ஏ.,பி.எட்., 'பரவையார் சங்கிலியார் திருமணம்" என்ற தலைப்பிலும் உரையாற்றினர். இரவு 8–00 மணியளவில் திருவீதியுலா நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள்.

சிதம்பரத்தில் :

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில், ஸ்ரீ சமயாசாரியர் சந்நிதியில் சொற்பொழிவு நிகழ்ச்சி திருமுறைக் கலாநிதி

திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நிகழ்வுற்றது. பிரம்மஸ்ரீ டாக்டர் ஐ. ஆனந்தநடராஜ தீட்சிதர் தலைமையில் பேராசிரியர் டாக்டர் திரு. சுவாமி ஐயா "சுவாதியும்ஜோதியும்" என்றதலைப்பில்சொற்பொழிவாற்றினார். அன்பர்கள் வழிபட்டும், சொற்பொழிவைக் கேட்டும் பயன் பெற்றனர்.

திருமுறை வேள்வி விழா

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரை நாளில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியருளிய 7 ஆம் திருமுறை முற்றோதல் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருக்கோயில் சந்நிதியில் 20—7—90 வெள்ளியன்று காலை 8-00 மணிக்குத் தொடங்கி மாலை 7-00 மணியளவில் நிறைவு பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மாலையில் எழுந்தருளி வழிபாடு ஆற்றி 7 ஆம் திருமுறை முற்றோதலை நிறைவு செய்து அருளாசி வழங்கினார்கள். ஓதுவாமூர்த்திகளும், புலவர்களும் கலந்துகொண்டு திருமுறை விண்ணப்பம் செய்தனர். உள்ளூர் அன்பர்களும், பிரமுகர்களும், பொதுமக்களும் செவிமடுத்துக் கேட்டுய்ந்தனர். முன்னதாகக் காலையில் மதுரை கமலைத் தியாகராசர் அவர்கள் திருமுறை முற்றோதலைத் தொடங்கி வைத்தார்கள்.

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வேளூர்.

வைத்தீசுவரன்கோயில் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்தோம். கோவில் மிக சுத்தமாகப் பராமரிப்பதுடன் நல்லமுறையில் அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன. அருள்மிகு வைத்தியநாத சுவாமியின் தரிசனம் மன அமைதியையும், மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடியது. நல்லமுறையில் நிர்வகிக்கும் ஆலய நிர்வாகிகள் பாராட்டுக்குரியவர்கள்.

(ஒ-ம்) சொ. ப. முத்துசாமி,
கண்காணிப்புப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, தஞ்சாவூர்.

7—6—90

எதிர்காலம்

ஜோதிஷம்
திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூதஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—8—1990 முதல் 16—9—1990 முடிய)

பிரமோதூதஹு ஆவணிமீ 1உ சுக்கிர வாரம் திருவாதிரை நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 12 நாழிகை 16 விநாடிக்குத் துலா லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரிய பகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். சங்கிரமாணவாராதிபதி சுக்கிரன் சேனாதிபதியாகிறார். அதனால் உலகத்தில் நல்ல மழை வருஷிக்கும். பயிர்கள் விருத்தியாகும். நாடுகளில் பொருளாதாரம் தழைக்கும். சுபிட்சம் நிலவும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உலகத்துக்குச் சிவசமய உபதேச கர்த்தாவாக வந்து திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள், ஜெகத்குரு மகான்கள் காட்டுகின்ற அறவழியில் நாடுகளில் செங்கோல் ஆட்சி நடக்கும். 10-ல் குருவும், 9 ஆம் இடத்தில் சந்திரனும் 9 ஆம் அதிபதி புதன் செவ்விய கிரகமாகிய சூரியனுடன் சேர்ந்து இலாபத்தில் இருப்பது மிக சிறந்த கிரக நிலையாகும். குருமகான்களின் உபதேச வழியில் இவ்வுலகம் இயங்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் க்ஷேத்திர ஐதீகவிசேஷ விழாக்கள் நடைபெற்று வரும். லோக மக்கள் தெய்வபக்தியில் நற்கிரியை புரிந்து செவ்வியவாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். தக்க செலவினமும் வைராக்கியப் போக்கில் செய்யும். உறுதி வாக்கை நிறைவுறச் செய்யும். ஆகஸ்டு 20 தேதியிலிருந்து அவசரமாக முன்மொழிதல் தவிர்த்தல் நலம். செவ்வாய்க்கிழமை மௌன விரதம் அனுஷ்டிக்கவும். வித்து வத்துவம், கலைத்துறையில் அரசாங்க கடிதங்களில் ஸ்ரீ கணபதி அருளில்நற்பலன்ஏற்பட்டுக்கொண்டிருக்கும். எல்லா அலுவல்களும் இஷ்டசித்தியாகநடந்துவரும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஆகஸ்டு 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் இராஜகண்யமாக வந்து கொண்டிருக்கும். சகோதரர் மனைவி வழியினர் நலன்களில் செலவினமும் செய்யும். பொன்மணி பூஷணங்கள்வாங்குதல்ஆகும். வித்துவத்துவம்,கலைத்துறையில் புகழ் தரும். எல்லாக்காரியங்களையும் புத்தி மேம்பாட்டில் செவ்வையாக நடத்தச்செய்யும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செப்டம்பர் 3 வ ஆனல் கட்டிட பிராப்தியில் நல்லன ஏற்பட்டு நவீன அமைப்பு ஆகும். ஆகஸ்டு 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நற்பலன்வரும். அரசாங்கக் கடிதப் போக்குவரத்தில் நற்பலனை உண்டு பண்ணும். பூமியில், சகோதர நன்மைகளில் பணம் முடங்கும். தீவிரபான்மையில் எல்லாக்காரியங்களையும் நடத்தி வரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். செப் டம்பர் 2,3 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அரச கண்யத்தில் வந்து நிறையும். வித்துவத்துவம், கலைத் துறையில் பிரசித்தம் தரும். அரசாங்கத்தில் கௌரவிக்கப் படுதல் ஆகும். புகழாரம்தரும். அனைத்து நடைமுறைக்காரியங் களையும் வெற்றியாக நடத்திவரும். ஆகஸ்டு 20 தேதி முதல் பூமியில் அபிவிருத்திபலனை ஏற்படுத்தி வரும். செப்டம்பரில் கட்டிடம், வாகனங்களில் நவீன அமைப்புப் பொருந்தும். ஆரம்பித்த எல்லாக் காரியங்களும் ஜெய பிராப்தியாக நடந் தேறும். இஷ்டர்கள் வருகைத்தருவர். சல்லாப நிலைமையாகும். செப்டம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் இராஜகண்யத்தில் வந்துகொண்டிருக்கும். அதற் கேற்ப சுப விசேஷங்களில் செலவும் ஏற்கும். புத்திரர் அல்லது பௌத்திரர்களின்நலன்களுக்கு ஓர்முதலீடு ஆகும். உல்லாசப் பயணம் செல்லும். ஆகஸ்டு 20தேதி ஆனல் முயற்சித்தவற்றில் வெற்றிகாணும். செப்டம்பர் 3 இல் ஓர் ஆபரணம் வாங்கும். எல்லாக் காரியங்களையும் கெடியாக நடத்தி வரும். செப்டம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதி களில் முதலீடும் செலவினமும் ஆகும். பின் ஆதாயம் தரும். சிரோபாதை வந்து நீங்கும். இருப்பிடத்தில் ஓர் முனி இருப்ப தால் வந்த இன்னல்கள் தக்க மாந்திரீகத்தால் நிவர்த்தியாகும். நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு, குருமார்களிடம் ஆசிபெறுதல் சம்பவிக்கும். செப்டம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் மூன்று வகையில் வந்து நிறையும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் பிரசித்தமும் அரசு நன்மை யும் ஏற்படச்செய்யும். செப்டம்பர் 3 தேதியளவில்வீடுமனையில் நல்ல ஏற்பாடு நடக்கும். சமயோசிதத்தில் சில காரியங்களை நடைமுறைப் படுத்தும். ஓர் மகவு உண்டாகும். மன உறுதியில் நடுவுநிலை கடைப்பிடிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செப்டம்பர் 10, 11தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம், கலைத் துறையில் அரசாங்கநன்மதிப்பும் பதவிஉயர்வும்தரும். வைதீக ஆசாரம் பேணுதல் ஆகும். உடனிருப்போருடன் கடமைப் பணி வலியுறுத்தல் போன்ற ஸ்திரவாக்கு உயர்ஸ்திதியளிக்கும். எல்லாக்காரியங்களையும் புத்திமேம்பாட்டில் சிறப்பாகநடத்தச் செய்யும். தாம்பத்திய வாழ்வில் பிணக்குவரினும் உடன் சுமுகம் ஆகும். புத்திரர் புத்திரிகளுக்கு உயர்வளிக்கும். ஆகஸ்டு 17 செப்டம்பர் 12, 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம் ஞாயிறு, திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திரம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் அதிகம் வரச் செய்யும். அதற்கேற்பக் குடும்ப செலவினம் இருந்து வரும். ஆகஸ்டு 19 தேதி ஆனல் எல்லா முயற்சித்த சமூக நலக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்து நற்பெயர்வரச் செய்யும். ரோகம் நிவர்த்தி ஆகும். குடும்பத் தினர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்

களுக்கு மேன்மைஸ்திதி, சுபம் தரும். செப்டம்பர் 3 தேதியின் மேல் மகவுண்டாகுதல், பருவ பெண்கள் புட்பவதியாகுதல் ஆகும். ஆகஸ்டு 18, 19, 20 செப்டம்பர் 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்பச்செலவினமும் செய்ய நேரும். வித்துவத்துவம், கலைத்துறையில் அரசுநன்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரனுக்கு இரத்தகாயம் அல்லது வயிற்று நலிவு வந்து குணமாகும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு நெய் தீபம் போடவும். நலம் தரும். ஆகஸ்டு 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனக நடக்கும். பண வருமானம் வரும். பூமியில் இயந்திரங்களில் முதலீடு செய்யும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலனை ஏற்படுத்தும். மனோ உறுதியில் எல்லா அலுவல்களையும் செயல்படுத்தி வரும். ஆகஸ்டு 20 தேதியின் மேல் உற்றவர் அல்லது நெருங்கிய தொடர்பில் இருந்த ஒருவர் சிறிது காலம் பிசுவுப் போக்கில் இருந்து கொள்வர். செப்டம்பர் 3 தேதியில் சிறுநீரகம் நலிவு வந்து வைத்தியத்தில் குணமாகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 23, 24, தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். ஆகஸ்டு 20 தேதிக்கு மேல் பூர்வ பொருள் பிராப்தியில் நல்லன ஏற்படச் செய்யும் வியாதி குணமாகி நல்ல ஆரோக்கியம் தரும். புத்திரர், பௌத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். சாஸ்திர ஆராய்ச்சி, தத்துவம் ஞானங் கள் இவற்றில் மனம் செல்லும். நல்லவர், பிரபலஸ்தர் சந்திப்பு ஏற்படும். குருமார்கள் தரிசனம் ஆசி பெறுதல் ஆகும். செப்டம்பர் 3 தேதியில் ஓர் மகவு உண்டாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும், எல்லா விருத்திகளிலும் சிறப்புப் பலன் தரும். ஆகஸ்டு 25, 26, 27 இத்தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

ஆவணி மாதச் சிறப்பு நாட்கள்

17—8—90 வெள்ளி, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

18—8—90 சனி, சனிப்பிரதோஷம். மாதசிவராத்திரி, வேளூர் ஸ்ரீ விஜயதீர்த்த விநாயகர் உற்சவ ஆரம்பம்.

19—8—90 ஞாயிறு, போதாயன அமாவாசை.

20—8—90 திங்கள், சர்வ அமாவாசை. சோமபிரதக்ஷிணம். தர்பசிரஹம். இளையான்குடிமாறர் குருபூசை.

21—8—90 செவ்வாய், மதுரை ஆவணிமூல உற்சவ ஆரம்பம.

23—8—90 வியாழன், மறைஞானசம்பந்தர் குருபூசை.

24—8—90 வெள்ளி, விநாயக சதுர்த்தி விரதம், வேளூர் ஸ்ரீ விஜயதீர்த்த விநாயகர் தீர்த்தம். சாமோபாகர்மா.

25—8—90 சனி, ரிஷிபஞ்சமி

28—8—90 செவ்வாய், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம், ஜேஷ்டாஷ்டமி, தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா முதல்நாள்.

29—8—90 புதன், தருமை ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழா இரண்டாம் நாள். கேதாரகௌரிவிரத ஆரம்பம்.

30—8—90 வியாழன், ஆவணிமூலம், வேளூரில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் அபிஷேகம், புறப்பாடு. திருவையாறு சூரியபுஷ்கரணியில் தீர்த்தம். இரவு புஷ்கரணியில் தெப்பம். தருமை ஆதீன பூசைமடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை, மாலை பட்டமளிப்பு விழா, ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழா நிறைவுநாள். குங்குலியக்கலய நாயனார் குருபூஜை.

2—9—90 ஞாயிறு, பிரதோஷம். சிரவண விரதம்.

3—9—90 திங்கள், ஓணப்பண்டிகை, ஸ்ரீநடராஜர் அபிஷேகம். வேளூர் ஸ்ரீமத் ரிஷபலிங்கத்தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூஜை

5—9—90 புதன், மஹாளயபக்ஷ ஆரம்பம்.

7—9—90 வெள்ளி திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம்.

8—9—90 சனி, சங்கடஹரசதுர்த்தி.

10—9—90 திங்கள், கிருத்திகைவிரதம், தருமை ஸ்ரீசண்முகர் அபிஷேகம். வேளூர் கிருத்திகை.

12—9—90 புதன், மயிலாடுதுறை தருமக்கட்டளை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி சம்வத்ஸராபிஷேகம், மத்யாஷ்டமி.

14—9—90 வெள்ளி திருநள்ளாறு தர்பாரண்யேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

15—9—90 சனி, செருத்துணை நாயனார் குருபூசை.

16—9—90 ஞாயிறு, ஆபில்யவிழா. பிரதோஷம். கலியுகாதி. புகழ்த்துணை நாயனார், அதிபத்த நாயனார் குருபூஜைகள்.

உ
சிவமயம்

தருமை ஆதீனச் சிறப்பு நிகழ்ச்சிகள்

தருமை ஆதீனம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில்

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீசுவரசுவாமி திருக்கோயிலில் திருமுறை வேள்வி

9 ஆம் திருமுறையும் 10 ஆம் திருமுறையில் முதல் தந்திரமும்

13—9—90 வியாழக்கிழமை திருவாதிரைநாள் காலை 7-00 மணிக்குத் தொடங்கி மாலை 7-00 மணி வரை நடைபெறும். திருமுறைஇசைவாணர்கள், புலவர்கள் திருமுறை விண்ணப்பம் செய்வர்.

மாலை 7-30 மணி அளவில்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

எழுந்தருளி வழிபாடாற்றித் திருமுறை முற்றோதலை நிறைவு செய்தருள்வார்கள்.

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருத்தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் மாத ஜன்மநட்சத்திர நாளாகிய 16—9—90 ஞாயிற்றுக்கிழமை யன்று நமிநந்தியடிகள் அவதாரத்தலமும், திருநெய்ப்பேர் என வழங்கப் பெறுவதும், வைப்புத்தலமுமாகிய ஏமப்பேறூர் ஸ்ரீ வன்மீகநாதர் திருக்கோயிலிலும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் குறிக்கப் பெற்றதும், குன்னியூர் என வழங்கப் பெறுவதும், வைப்புத்தலமுமாகிய குன்றியூர் ஸ்ரீ விசுவநாதர் திருக்கோயிலிலும் சிறப்புவழிபாடு நடைபெறும்.

முதல்ஞாயிறு அருளுபதேசம்

2—9—90 ஞாயிறன்று மாலை 7-00 மணி அளவில் தருமை ஆதீனத் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆங்கிலமாத முதல் ஞாயிறுதோறும் வழங்கியருளிய பெரிய புராண அருளுரை நிறைவு பெற்றதையடுத்துத் திருவிளையாடற் புராண அருளுரை தொடங்கி நடைபெறும்.

அன்பர்கள் வருக ! அருள் நலம் பெறுக !

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press Dharmapuram, Mayiladuthurai 10-8-90